## பின்னிணைப்பு 3

| ஒரு பொருட் பல்பெயர் விளக்கும் நிகண்டுகள் | |
|---|---|
| 1. திவாகரம் | 9. பல் பொருட் சூடாமணி |
| 2. பிங்கலம் | 10. பொதிகை நிகண்டு |
| 3. உரிச்சொல் நிகண்டு | 11. நாமதீப நிகண்டு |
| 4. கயாதரம் | 12. சிந்தாமணி நிகண்டு |
| 5. பாரதி தீபம் | 13. அபிதானந்தனிச் செய்யுள் நிகண்டு |
| 6. சூடாமணி நிகண்டு | 14. விரிவு நிகண்டு |
| 7. கைலாச நிகண்டு | 15. நவமணிக் காரிகை நிகண்டு |
| 8. ஆசிரிய நிகண்டு | 16. தமிழுரிச் சொற் பனுவல் |
| | 17. அபிதான மணிமாலை |

| ஒரு சொல் பல்பொருள் விளக்கும் நிகண்டுகள் | |
|---|---|
| 1. திவாகரம் | 8. கைலாச நிகண்டு |
| 2: பிங்கலம் | 9. பல்பொருட் சூடாமணி (வடமலை நிகண்டு) |
| 3. உரிச்சொல் நிகண்டு | 10. அரும் பொருள் விளக்க நிகண்டு |
| 4. கயாதரம் | 11. பொதிகை நிகண்டு |
| 5. பாரதி தீபம் | 12. நாநார்த்த தீபிகை |
| 6. சூடாமணி நிகண்டு | 13. விரிவு நிகண்டு |
| 7. அகராதி நிகண்டு | 14. தமிழுரிச் சொற்பனுவல் |

| பல் பொருட் கூட்டத்து ஒரு பெயரைத் தனிப்பட விளக்கும் நிகண்டுகள் | |
|---|---|
| 1. திவாகரம் | 5 பல் பொருட் சூடாமணி |
| 2. உரிச் சொல் நிகண்டு | 6. பொருட்டொகை நிகண்டு |
| 3. பாரதி தீபம் | 7. உசித சூடாமணி |
| 4. சூடாமணி நிகண்டு | 8. தொகை அகராதி |

முதலாவது

# தெய்வப்பெயர்த் தொகுதி

## முதலாவது
# தெய்வப்பெயர்த் தொகுதி

### 1. அருகன் பெயர்

அனகன், அசலன், அதிகுணன், அபயன்,
அமைவன், அறிவன், அதிசயன், அமலன்,
பூரணன், புங்கவன், (புணர்) முக் குடையோன்,
அசோகுடைச் செல்வன், அண்ணல், தத்துவன்,
ஆதியங் கடவுள், அருவாழி யந்தணன்,
அரியணைச் செல்வன், அருளாழி வேந்தன்,
பண்ணவன், பகவன், எண்குணன், மாசேனன்,
விண்ணவன், தேவன், விறலோன், விளங்கொளி,
பொன்னெயில் நாதன், பூமிசை நடந்தோன்,
முனைவன், வீரன், முதல்வன், புனிதன்,
காமற் காய்ந்தோன், கடவுள் மூர்த்தி,
சினேந்திரன், திகம்பரன், சாந்தன், புண்ணியன்,
மூர்த்தி, ஆசான், முழுதொருங்கு உணர்ந்தோன்,
வர்தன், சினவரன், என்று இவை முதலாய்
அருகற்கு இன்னம் அனந்தம் பெயரே.

**அருகன் பெயர் (43)**

1. அனகன், 2. அசலன், 3. அதிகுணன், 4. அபயன், 5. அமைவுன், 6. அறிவன், 7. அதிசயன், 8. அமலன். 9. பூரணன், 10. புங்கவன், 11. முக்குடையோன், 12. அசோகுடைச் செல்வன், 13. அண்ணல், 14. தத்துவன். 15, ஆதியங்கடவுள், 16. அருவாழியந்தணன், 17. அரியணைச் செல்வன், 18. அருளாழிவேந்தன், 19. பண்ணவன், 20, பகவன், 21. எண்குணன், 22. மாசேனன், 23. விண்ணவன், 24. தேவன், 25. விறலோன், 26. விளங்கொளி, 27. பொன்னெயில் நாதன், 28. பூமிசை நடந்தோன், 29. முனைவன், 30. வீரன், 31. முதல்வன், 32. புனிதன், 33. காமற் காய்ந்தோன், 34. கடவுள்மூர்த்தி, 35. சினேந்திரன், 36. திகம்பரன், 37. சாந்தன், 38, புண்ணியன், 39. மூர்த்தி, 40. ஆசான், 41. முழுதொருங்கு உணர்ந்தோன், 42. வரதன், 43. சினவரன்.

**பாடவேறுபாடு—விளக்கம்**

தலைப்பு : அருகபரமேசுவரன் பெயர்

1 : 4 அபையன், 2 : 1 அமையவன், 2 : 3 அதிசெயன், 5 ; 4 வேந்தன், 6 : 4 அந்தணன், 7 : 4 மாசேநன், மாசினன், 8-9-ஆம் அடிகள் சில ஏடுகளில் மாறிக் (9, 8) காணப் படுகின்றன. 8:4 விளங்கொளிப், 11:4 கமலமூர்த்தி, கமலஹூர்தி. கடவுள் நிராயுதன் 12 : 3 திரியம்பதன் 13-14ஆம் அடிகளுக்கு

இடையில், 'தீர்த்தன் திருமரு மார்பன் உரவோன்' என ஓர் அடி சில ஏடுகளில் காணப்படுகிறது. 14 : 2 சிநன்வரன், சினன்வரன்-சிநன், வரன் என இரு பெயராகச் சிலர் கொள்வர். இவற்றுள் 'சினன்' என்பதற்கு அருகன் என்று கொள்ளலா மாயினும், 'வரன்' என்பதனை அவ்வாறு கொள்வதற்கில்லை. 'சினவரன் றேவன் சிவகதி நாயகன்' எனச் சிலப்பதிகாரம் (10 : 180) அருகனைக் குறிப்பிடுகிறது. இதற்குச் 'சினத்தைக் கீழ்ப்படுத்தியவன்' என விளக்கம் தருகிறார் அடியார்க்கு நல்லார் 15: 4 பேரே. (1)

## 2. சிவன் பெயர்

சங்கரன், இறையோன், காம தகனன்,
கங்கா தரனே, கறைமிடற்று அண்ணல்,
கூற்றை யுதைத்தோன், குன்ற வில்லி
ஏற்று வாகனன், திரியம்பகன், சோதி,
நக்கன், சடையோன், நாரி பாகன்,
முக்கட் பகவன், பசுபதி, பரமன்,
கொன்றை சூடி, (கொலை) மழு வாளி,
ஈமத் தாடி, பிஞ்ஞகன், பித்தன்,
ஆனை யுரித்தோன், அரன், சிவன், உருத்திரன்,
கால காலன், கபால மூர்த்தி,
நீல கண்டன், நீறணி கடவுள்
அரவா பரணன், ஆரழ லாடி,
பிறை (யது) சூடி, பெருமான், உமாபதி,
அழ (லது) வேந்தி, அமலன், ஆனந்தன்,
பரசு பாணி, சுடலை யாடி.
மானிட மேந்தி, மறைமுதல், யோகி,
புலித்தோ லுடையோன், புரமூன் றெரித்தோன்,
பினாக பாணி, பேயோ டாடி,
பூத நாதன் (புணர்) கங் காளன்,
ஞான மூர்த்தி, ஈசன், அனாதி
ஐம்முகன், பகவன், ஆதி, பாண்டரங்கன்,
ஆலமர் கடவுள், அந்தி வண்ணன்,
நந்தி, நம்பன், நாதன், தற்பரன்,
கண்ணுதல், மூர்த்தி, கயிலை யாளி—என்று
எண்ணிய நாமம் இன்னமும் பலவே.

### சிவன் பெயர் (64)

1. சங்கரன், 2. இறையோன், 3. காமதகனன், 4. கங்காதரன், 5. கறைமிடற்றண்ணல், 6. கூற்றையுதைத்தோன், 7. குன்றவில்லி, 8. ஏற்றுவாகனன், 9. திரியம்பகன், 10. சோதி, 11. நக்கன், 12. சடையோன், 13. நாரிபாகன்,



14. முக்கட்பகவன், 15. பசுபதி, 16. பரமன், 17. கொன்றை சூடி, 18. மழுவாளி, 19. ஈமத்தாடி, 20. பிஞ்ஞகன், 21. பித்தன், 22. ஆனையுரித்தோன், 23. அரன், 24. சிவன், 25. உருத்திரன், 26. காலகாலன், 27. கபாலமூர்த்தி, 28. நீல கண்டன், 29. நீறணி கடவுள், 30. அரவாபரணன், 31. அழலாடி, 32. பிறைசூடி, 33. பெருமான், 34. உமாபதி, 35. அழலேந்தி, 36. அமலன், 37. ஆனந்தன், 38. பரசு பாணி, 39, சுடலையாடி, 40. மானிடமேந்தி, 41. மறை முதலீ, 42. யோகி, 43. புலித்தோலுடையோன், 44. புரமூன்றெரித்தோன், 45. பினாகபாணி, 46. பேயோடாடி, 47. பூதநாதன், 48. கங்காளன், 49. ஞானமூர்த்தி, 50. ஈசன், 51. அனாதி, 52. ஐம்முகன், 53. பகவன், 54. ஆதி, 55. பாண்டரங்கன், 56. ஆலமர் கடவுள், 57. அந்திவண்ணன், 58. நந்தி, 59. நம்பன், 60. நாதன், 61. தற்பரன், 62. கண்ணுதல், 63. மூர்த்தி, 64. கயிலையாளி.

பாடவேறுபாடு—விளக்கம்

8.3 பிஞ்சகன், 10:3-4 கபால மேந்தி, 14.1-2 அழலினை யேந்தி, 20:3.4 யீசனாதி, 21.1-2 ஐம்முகப் பகவன், 22. அந்தி வண்ண னாலமர் கடவுள், 24.1-2 கண்ணுதல்மூர்த்தி என ஒரு பெயராகவும், சிலர் கொள்வர்: 3-4 கைலையாளி 25.1 எய்திய 4. பல்பெயர், பலபெயர். 25 ஆம் அடிக்குப் பின். 'காமாரி புராரி அந்தகா ரியுமென, ஆமா லீசற் கமைந்தொளிர் பெயரே' என ஈரடிகள் ஓர் ஏட்டில் காணப்பட்டன. (2)

## 3. திருமால் பெயர்

மாயோன், மாதவன், நாரணன், கேசவன்,
சீதரன், திருமகள் - பூமி - கொழுநன்,
விண்டு, (விறல்) அரி, திரிவிக் கிரமன்,
உந்தி பூத்தோன், உவண முயர்த்தோன்,
வாமனன், கண்ணன், கோவிந்தன், அச்சுதன்,
(ஆழ்) கடற் றுயின்றோன், அரவணைச் செல்வன்,
சக்கரா யுதனே, சங்க மேந்தி,
(கருங்)கடல் வண்ணன், கமலக் கண்ணன்,
சார்ங்க பாணி, (தகு) பஞ் சாயுதன்,
உலக முண்டோன், உலகினை யளந்தோன்,
நார சிங்கன், ஆதி, வராகன்,
பதும நாபன் மதுசூ தனனொடு
தாமோ தரனே, (தகு) பீதாம்பரன்,
காவற் கடவுள், முராரி, முகுந்தன்,
பெருமான், பிரமன் தந்தை—என்று இவை
திருமாற்கு அனந்தம் சிறந்ததொல் பெயரே.

**திருமால் பெயர் (38)**

1. மாயோன், 2. மாதவன், 3. நாரணன், 4. கேசவன், 5. சீதரன், 6. திருமகள் கொழுநன், 7. பூமி கொழுநன், 8. விண்டு, 9. அரி, 10. திரிவிக்கிரமன், 11. உந்தி பூத்தோன், 12. உவணமுயர்த்தோன், 13. வாமனன், 14. கண்ணன், 15. கோவிந்தன், 16. அச்சுதன், 17. கடற்றுயின்றோன், 18. அரவணைச் செல்வன், 19. சக்கராயுதன், 20. சங்கமேந்தி, 21. கடல்வண்ணன், 22. கமலக்கண்ணன், 23. சார்ங்கபாணி, 24. பஞ்சாயுதன், 25. உலகமுண்டோன், 26. உலகினை யளந்தோன், 27. நாரசிங்கன், 28. ஆதி, 29. வராகன், 30. பதுமநாபன், 31. மதுசூதனன், 32. தாமோதரன், 33. பீதாம்பரன், 34. காவற்கடவுள், 35. முராரி, 36. முகுந்தன், 37. பெருமான், 38. பிரமன் தந்தை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: மகாவிஷ்ணு பெயர், மகாவிஷ்ணுவின் பெயர்

1:1 மாலோன் 2:2 திருமகன், திருமன் 4. கேள்வன், 3.3:4 திருவிக்கிரமன், திருவுக்கிறைவன், 6:1-2 அலைகடற் றுயின்றோன் 11 ஆதிவராகன் என ஒரு பெயராகவும் சிலர் கொள்வர். 12:1-2 பற்பனாபன். இதனை அடுத்து ஒரு சில ஏடுகளில், 'பாண்டவர் தூதன் பருந்து வாகனன்' என ஓர் அடி காணப்படுகிறது. 14-15ஆம் அடிகளுக்கு இடையில் 'பூவை வண்ணன் குறளி நெடியோன், நேமி வல்லவன் நெடுமால் கரியோன்' என ஈரடிகள் சில ஏடுகளில் மிகுந்துள. 15:4 என்று இவை முதல் 16:4 பேரே. (3)

## 4. பிரமன் பெயர்

உந்தியி லுதித்தோன், (ஒளி) மலர் மிசையோன்,
அன்ன வூர்தி. அன்ன முயர்த்தோன்,
நான்முகன், மால்மகன், (நலங்கேழ்) எண்கணன்,
வானவர் முதல்வன், மண்பொதுத் தந்தை,
இறைவன், குரவன், மறையோன், விரிஞ்சன்,
அந்தணன், ஞானன், அயன், வரன், திசைமுகன்,
பிதாமகன், விதாதா, கமல யோனி,
வேதா, போதன், விதி, பர மேட்டி,
இரணிய கருப்பன், படைப்போன்—இவை முதல்
அரணியல் பிரமற்கு அனந்தம் பெயரே.

**பிரமன் பெயர் (27)**

1. உந்தியிலுதித்தோன், 2. மலர் மிசையோன், 3. அன்ன வூர்தி, 4. அன்னமுயர்த்தோன், 5. நான்முகன், 6. மால்மகன், 7. எண்கணன், 8. வானவர் முதல்வன், 9. மண்பொதுத்



தந்தை, 10. இறைவன், 11. குரவன், 12. மறையோன், 13. விரிஞ்சன், 14. அந்தணன், 15. ஞானன், 16. அயன், 17. வரன், 18. திசைமுகன், 19. பிதாமகன், 20. விதாதா, 21. கமலயோனி, 22. வேதா, 23. போதன், 24. விதி, 25. பரமேட்டி, 26. இரணிய கருப்பன், 27. படைப்போன்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பிரமாவின் பெயர். பிரமதேவன் பெயர்.

4:2 முதுவன் 6:1-2 அனந்த ஞானன் 7-8 பிதாமகன் வேதா விதியே விதாதா கமல யோனி காசினி யளித்தோன் 9:3-4 படைப்போ னென்றிவை 10:1 அரணிய 4. பேரே. (4)

## 5. இந்திரன் பெயர்

புரந்தரன், புனிதன், பொன்னகர்க் கிறைவன்,
வாசவன், அமரர்கோன். மால், முகி லூர்தி,
வேள்வி நாயகன், விண்முழு தாளி,
ஆயிரங் கண்ணன், அயிராணி கேள்வன்,
மருத்துவன், மகவான், வலாரி, விருத்திராரி,
வெள்ளை வாரணன், இமையவர் வேந்தன்,
பாக சாதனன், ஆகண் டலனே,
வச்சிர பாணி, சதக்கிருது—என்று இவை
எச்சமில் இந்திரற்கு இயன்றதொல் பெயரே.

**இந்திரன் பெயர் (21)**

1, புரந்தரன், 2. புனிதன். 3. பொன்னகர்க்கிறைவன், 4. வாசவன், 5. அமரர் கோன், 6. மால், 7. முகிலூர்தி, 8. வேள்வி நாயகன், 9. விண்முழுதாளி, 10. ஆயிரங்கண்ணன், 11. அயிராணி கேள்வன், 12. மருத்துவன், 13. மகவான், 14. வலாரி, 15. விருத்திராரி, 16. வெள்ளைவாரணன், 17. இமையவர் வேந்தன், 18. பாகசாதனன், 19. ஆகண்டலன், 20. வச்சிர பாணி, 21. சதக்கிருது.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: தேவேந்திரன் பெயர்

2-4 வாசவ னமரர்கோன் வேள்வி நாயகன்
விண்முழு தாளி யாயிரங் கண்ணன்
மருத்துவன் மகவான் மாலரி முகிலூர்தி

3:2 நாயன்

8-10 மருத்துவன் மகவான் வலாரி முகிலூர்தி
வரைசிற கரிந்தோன் கோபதி சக்கிரன்
புருகூதன் சசிகேள்வன் கவுசிக னாசுனாசி

என்னும் அடிகள் ஒரு சில ஏட்டில் காணப்படுகின்றன.

இதனை அடுத்து, 'இந்திரன் மகன் பெயர்' என்னும் தலைப்புடன்,

'சயந்த னிந்திரன் றன்மக னாகும்'
என ஒரு சூத்திரம் சில பிரதிகளில் காணப்படுகிறது. (5)

### 6. கணபதி பெயர்

ஒற்றைக் கொம்பன், விநாயகன். ஐங்கரன்,
பாசாங் குசதரன், ஆகு வாகனன்,
(வெற்றி) யானை முகவன் கணபதி.

**கணபதி பெயர் (6)**

1. ஒற்றைக்கொம்பன், 2. விநாயகன், 3. ஐங்கரன், 4. பாசாங்குசதரன், 5. ஆகுவாகனன், 6. யானைமுகவன்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கணபதியின் பெயர், விநாயகன் பெயர்

2-3 வெற்றி யானை முகவன் கணபதி
பாசாங் குசதர னாகுவ கனனே,
2-3 வெற்றி யானை முகவன் மும்மதன்
ஆகு வாகனன் கணபதி பெயரே.
2-4 வெற்றி யானை முகவன் கணபதி
ஏரம்ப னங்குச பாச மேந்தி
அம்பிகை தனையன் ஆகுவா கனனே. (6)

### 7. முருகன் பெயர்

முருகன், சூர்ப்பகை, செட்டி, குமரன்,
அறுமீன் காதலன், சேவலங் கொடியோன்,
கார்த்தி கேயன், கடம்பன், சுவாமி,
வேலுடைக் கடவுள், மேலவர்க் கிறைவன்,
வரைபக வெறிந்தோன், வள்ளி மணாளன்,
அரன்மகன், குறிஞ்சிமன், சரவணத் துதித்தோன்,
அறுமுகன், விசாகன், குகன்சேய், செவ்வேள்,
தேவர்சே னாபதி, மயிலாளி, சேந்தன்,
கந்தன், காங்கேயன், வேள்எனச் செப்புவர்.

**முருகன் பெயர் (26)**

1. சூர்ப்பகை, 2. செட்டி, 3. குமரன், 4. அறுமீன்காதலன், 5. சேவலங்கொடியோன், 6. கார்த்திகேயன், 7. கடம்பன், 8. சுவாமி, 9. வேலுடைக் கடவுள், 10. மேலவர்க் கிறைவன், 11. வரைபகவெறிந்தோன், 12. வள்ளிமணாளன், 13. அரன் மகன், 14. குறிஞ்சிமன், 15. சரவணத்துதித்தோன், 16. அறுமுகன், 17. விசாகன், 18. குகன், 19. சேய், 20. செவ்வேள், 21. தேவர்சேனாபதி, 22. மயிலாளி, 23. சேந்தன், 24. கந்தன், 25. காங்கேயன், 26. வேள்.



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு , குமரன் பெயர், சுப்பிரமணியர் பெயர்.

2:3-4 சேவற்கொடியோன், 4:3-4 வேலவர்க் கிறைவன்
5:3-4 வள்ளிமண வாளன்
8-9 தேவர் சேனாதிபதி செழுமயி லாளி
சேந்தன் கந்தன் வேளெனச் செப்புவர் (7)

### 8. காமன் பெயர்

வேனி லாளி, வேள், மதன், அனங்கன்,
மாரன், பூ வாளி, மன்மதன், கந்தர்ப்பன்,
பஞ்ச பாணன், கருப்பு வில்லி,
இரதி காதலன், மகர முயர்த்தோன்,
திருமால் புதல்வன், வயந்தன்—என்று இவை
வருமால் காமற்கு இயன்றவன் பெயரே.

**காமன் பெயர் (14)**

1. வேனிலாளி, 2. வேள், 3. மதன், 4. அனங்கன், 5. மாரன், 6. பூவாளி, 7. மன்மதன், 8. கந்தர்ப்பன், 9. பஞ்சபாணன், 10. கருப்புவில்லி, 11. இரதி காதலன், 12. மகரமுயர்த்தோன், 13. திருமால் முதல்வன், 14. வயந்தன்.

பாடவேறுபாடு— விளக்கம்

தலைப்பு : மன்மதன் பெயர்

4:2 காந்தன், 5:3 வசந்தன், 6:3-4 இயன்றதொல் பெயரே 3-4 அடிகளுக்கு இடையில் 'சம்ப ராரி மதிசகன் சித்தசன்' என ஓர் அடி சில ஏடுகளில் உளது. 5 ஆம் அடி தொடக்கமாகக் காமனுக்கு வேறு பெயர்களையும் சேர்த்து மேலும் 6 அடிகள் கொண்டதாயும் சில பிரதிகளில் இச்சூத்திரம் பின் வருமாறு வளர்ந்து காணப்படுகிறது:

திருமால் புதல்வன் வசந்தன் சித்தசன்
மகிழம்பூ[1] மாலையன் மங்கையர் சேனையன்
பனிமதிக்குடையோன் பசுங்கிளிப் பரியோன்
தென்றலந் தேரோன்[2] திரைகடல் முரசோன்
தாழம்பூ வாளினன்[3] தாமன் தமையன்[4]
கருங்குயிற் காளன் கங்குல் வேழத்தன்
வருமால் காமற்கு இயன்றவண் பெயரே. (8)

---

1. வகுள மாலையன், மகிளம்பூ மாலையன்
2. தென்றற் றேரோன்
3. தாழப்பூ வாளினன்
4. சாமன் தமையன், அருமன் தமையன்

## 9. வயிரவன் பெயர்

வயிரவன், காரி, வடுகக் கடவுள்.

**வயிரவன் பெயர் (2)**

1. காரி, 2. வடுகக் கடவுள்.

பாடவேறுபாடு— விளக்கம்

'வயிரவன் காரி வடுகக் கடவுள்'
என்பதைத் தொடர்ந்துசில பிரதிகளில்,
'ஞாளி யூர்தி சேத்திர பாலன்
கோழிக் கொடியோன் சாத வாகனன்'
என ஈரடிகள் உள.

இன்னும் ஒருசில ஏடுகளில் இந்நூற்பா மிகவும் வளர்ந்து வேறு பல பெயர்களைக் கொண்டதாய்ப் பின்வருமாறு காணப்படுகிறது:

வயிரவன் காரி வடுகக் கடவுள்
மூர்த்திதன் குமரன் முத்தலை வேலோன்
கீர்த்தியில் [1]வளரும் கேத்திர பாலன்
முற்றியல் கொடுஞ்சின முடுவல் வாகனன்
குற்றமில் சீர்கருங் குதிரை யாளன்
சேரலர் நடுங்கும் [2] தெண்டா யுதத்தோன்
தார்புனை பச்சைச் சட்டை யாளன்
நேரிய பவள நெடுங்குஞ்சி யுடையோன்
ஆரிய தனையன் ஆபத் தாரணன்
முத்தமிழ்க் குரிசில் முண்டகச் செழுமலர்
கைத்தல வடுகக் கடவு ளானோன்
காரிய புவனம் காத்தருள் பிள்ளை
வாரியின் நிறஞ்சேர் வயிரவன் பெயரே. (9)

## 10. ஐயனார் பெயர்

கோழிக் கொடியோன், சாத வாகனன்,
காரி, சாத்தன், (கடல் நிற) ஐயன்.

**ஐயனார் பெயர் (4)**

1. கோழிக் கொடியோன், 2. சாத வாகனன், 3. காரி, 4. சாத்தன்.

பாட வேறுபாடு—விளக்கம்

தலைப்பு: அய்யனார் பெயர்

1,2 அடிகளைத் தொடர்ந்து பின்வரும் ஈரடிகள் சில பிரதிகளில் உள.

'பூரனை கேள்வன் புட்கலை மணாளன்
செண்டா யுதனே யரியர புத்திரன். (10)

1. வழங்கும், 2. தண்டாயுதத்தோன்



## 11. வயிச்சிரவணன் பெயர்

மந்திரி, குபேரன், நிதிக்கோன், இயக்கன்,
பிங்கலன், அரற்கு(ப் பிரியா)த் தோழன்,
வடதிசைத் தலைவன், இயக்கர் வேந்தன்.
அளகை யாளி, (ஆய)முற் காவலன்,
புட்பக வூர்தி, தனதன், மரகதன்—என
வைப்பர் நாமம் வயிச்சிர வணற்கே.

**வயிச்சிரவணன் பெயர் (13)**

1. மந்திரி, 2. குபேரன், 3. நிதிக்கோன், 4. இயக்கன், 5. பிங்கலன், 6. அரற்குத் தோழன், 7. வடதிசைத் தலைவன், 8. இயக்கர் வேந்தன், 9. அளகையாளி, 10. முற்காவலன், 11. புட்பகவூர்தி, 12. தனதன், 13. மரகதன்.

பாட வேறுபாடு—விளக்கம்

தலைப்பு: குபேரன் பெயர்

4:3-4 யாயபுட் குரவன் 5:3-4 தனதன் என்றிவை 6:3-4 வைச்சிர வணற்கே, வச்சிர வணற்கே, வச்சிரா வணற்கே.

இதனை அடுத்து வீரபத்திரன் பெயர் என்னும் தலைப்பில் ஒரு சூத்திரம் சில பிரதிகளில் உள்ளது.

அம்பிகை பாகன் அழற்கண்ணி லுதித்தோன்
செம்பவ ளாசலத் திருவுடை யோனே
ஐங்கரற் கிளையோன் அணிதிகழ் சடையோன்
செஞ்சுடர் விழியோன் சிம்பு ளானோன்
வஞ்சகத் தக்கன் மகஞ்சிதைத் திட்டோன்
முடிவிலாக் குரோதன் முரண்சிலை யுடையோன்
படிபுகழ் வடிவப் பத்திரை கேள்வன்
சிங்கவன் றோலில் செம்பட்டாம் புனைவோன்
பங்கமில் வீர பத்திரன் பேரே. (11)

## 12. புத்தன் பெயர்

அண்ணல், வாமன், (அருங்) கலை நாயகன்,
புண்ணிய முதல்வன், ஆதி, புங்கவன்,
பாரின் மிசையோன், சாந்தன், புனிதன்,
பகவன், செயினன், அறவன், மூர்த்தி,
போதி வேந்தன், சினவரன், புத்தன்
ஏக தேவன், முக் குற்றம் கடிந்தோன்,
அருள்நெறி சுரக்கும் செல்வன், அனந்த-
லோசனன், (வனைந்த) பூமிசை நடந்தோன்,

அகளங்கன், முத்தன், ஆதி(யங்) கடவுள்,
புண்ணிய மூர்த்தி, பண்ணவன், நாதன்,
பஞ்ச தாரைவிட்டு அவுணர்க் கூட்டிய
எஞ்சலில் பெருமாற்கு இன்னமும் பலவே.

**புத்தன் பெயர் (26)**

1. அண்ணல். 2. வாமன், 3. கலைநாயகன், 4. புண்ணிய முதல்வன். 5. ஆதி, 6. புங்கவன், 7. பாரின்மிசையோன், 8. சாந்தன், 9. புனிதன், 10. பகவன், 11. செயின்ன், 12. அறவன், 13. மூர்த்தி, 14. போதிவேந்தன். 15. சினவரன், 16. ஏகதேவன், 17. முக்குற்றம் கடிந்தோன், 18. அருள்நெறி சுரக்கும் செல்வன், 19. அனந்த லோசனன், 20. பூமிசை நடந்தோன், 21. அகளங்கன், 22. முத்தன், 23. ஆதிக் கட்வுள், 24. புண்ணிய மூர்த்தி, 25. பண்ணவன். 26. நாதன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 வாமனன், 2:1-2 புண்ணியன் மூர்த்தி, 3:1-2 பாரிமிதையோன், 4:2-4 சைனன் சினன்தவன் மூர்த்தி, 5:3-4 சினவரன் சாக்கியன், சினன்வரன் புத்தன், 7:4 அனந்தன், 8: 1-2 விலோசனன் வளர்ந்த, யோசனை வளர்ந்தோன், லோசனை விளைந்தோன், 9:2 புத்தன், 11:3-4 அவுணர்க் கட்டிய, 12:3-4 இன்னவும் பல்பெயர், இன்னவும் பல்பேர், 4, 10ஆம் அடிகள்சில பிரதிகளில் காணப்படவில்லை. (12)

## 13. நமன் பெயர்

அந்தகன், தருமன், தென்திசை முதல்வன்,
சண்டன், மறலி, கூற்று, சமன், ஞமன்,
செங்கோற் கடவுள், இயமன், நடுவன்,
தங்கிய நமன்மேல் தரும் பெயர் ஆகும்,

**நமன் பெயர் (11)**

1. அந்தகன், 2. தருமன், 3. தென்திசைமுதல்வன், 4. சண்டன், 5. மறலி, 6. கூற்று, 7. சமன், 8. ஞமன், 9. செங்கோற் கடவுள், 10. இயமன், 11. நடுவன்,

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இயமன் பெயர்

3:3-4 நடுவ னியமன், இயம னென்றிவை 4:2 நமன் பெயர் (13)



## 14. காலன் பெயர்

சண்டனும் மறலியும் கூற்றும் சமனும் என்று
இந்த வகைப் பெயர் காலற்கும் ஆகும்

**காலன் பெயர் (4)**

1. சண்டன், 2. மறலி, 3. கூற்று, 4. சமன்,

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 கூற்றிற்கும் எய்தும். (14)

## 15. உமையவள் பெயர்

காமக் கோட்டி, அம்பிகை. கவுரி,
ஆரியை, சத்தி. அயிராணி, பார்ப்பதி,
இமைய் வல்லி, உமையவள் பெயரே.

**உமையவள் பெயர் (8)**

1. காமக்கோட்டி, 2. அம்பிகை, 3. கவுரி, 4. ஆரியை, 5. சத்தி, 6. அயிராணி, 7. பார்ப்பதி. 8. இமையவல்லி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பார்ப்பதி பெயர், பார்வதி, உமை பெயர்.

1:4 கெவுரி, கௌரி 2: 1-2 ஆரிய சத்தி. 4. பார்வதி 3:1-2 இமய வல்லி. 4. பேரே. (15)

## 16. கங்கையின் பெயர்

பகீரதி, சானவி, வரநதி, சுரநதி,
திரிபதகை, மந்தா கினி-இவை கங்கை.

**கங்கையின் பெயர் (6)**

1, பகீரதி. 2. சானவி, 3. வரநதி, 4. சுரநதி, 5. திரிபதகை 6. மந்தாகினி,

பாடவேறுபாடு—விளக்கம்

1:1-2 பாகீரதி சானுவி (16)

## 17. காடுகாள் பெயர்

காடுகாள்,- மோடி, காரிதாய், கொற்றி,
மாரி, சூரி, வடுகி, மூ தணங்கே.

**காடுகாள் பெயர் (7)**

1. மோடி, 2. காரிதாய், 3. கொற்றி, 4. மாரி, 5. சூரி, 6. வடுகி, 7. மூதணங்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: கொற்றி பெயர், வயிரவி பெயர்.

முதலடிக்கு 'மோடி பெயர்' என்றும் இரண்டாம் அடிக்கு 'வடுகி பெயர்' என்றும் தலைப்பிட்டு இரு சூத்திரங்களாக ஒரு பிரதியில் காணப்படுகிறது. ஒரு பிரதி இதனை மூவேறு தலைப்புகளில் மூன்று சூத்திரங்களாகப் பின்வருமாறு பாகுபடுத்திக் காட்டியுள்ளது :

காடுகாள்பெயர்
காடுகாண் மோடி.

கொற்றி பெயர்
காரிதாய் கொற்றி.

மாரிபெயர்
மாரி சூரி வடுகிமூ தணங்கே.

இதனை அடுத்துச் 'சேட்டையின் பெயர்' சில பிரதிகளில் காணப்படுகிறது. (17)

## 18. திருமகள் பெயர்

பொறி, மா, ஆக்கம், செல்வி, பொன், பூமகள்,
செய்யாள், இந்திரை, திருமகள் பெயரே,
கமலை, பதுமை விமலை, கோகனகை,
அனையவும் அவள் பெயர் ஆகும் என்ப.

**திருமகள் பெயர் (12)**

1. பொறி, 2. மா, 3. ஆக்கம், 4. செல்வி, 5. பொன், 6. பூமகள், 7. செய்யாள், 8. இந்திரை, 9. கமலை, 10. பதுமை, 11. விமலை, 12. கோகனகை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: இலக்குமியின் பெயர்

2:1 செய்யோள்

3:4 கோகனகை என்று

3, 4 ஆம் அடிகளை, 'லட்சுமி பெயர்' என்னும் தலைப்பில் தனிச் சூத்திரமாகக் கொள்கிறது ஒரு பிரதி. (18)

## 19. சரசுவதி பெயர்

பாரதி, வாணி, பனுவ லாட்டி,
வெண்டா மரையாள், வெள்ளை மேனியாள்,
நான்முகன் கிழத்தி, நாமகள், கலைமகள்,
உலக மாதா, (ஊர்) பூர வாகனி,
ஞான மூர்த்தி, (நற்) பா மடந்தை,



சொற்பயில் முதல்வி, (சொல்)லபிராமி,
சாவித் திரியே, காயத் திரிஎன
வாக்கின் செல்வியை நோக்கிய பெயரே.

**சரசுவதி பெயர் (16)**

1. பாரதி, 2. வாணி, 3. பனுவலாட்டி, 4. வெண்டாமரையாள், 5. வெள்ளை மேனியாள், 6. நான்முகன் கிழத்தி, 7. நாமகள், 8. கலைமகள், 9. உலக மாதா, 10. பூரவாகனி, 11. ஞானமூர்த்தி, 12. பாமடந்தை, 13. சொற்பயில் முதல்வி, 14. அபிராமி, 15. சாவித்திரி, 16. காயத்திரி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: சரசோதி பெயர், வாக்கின் செல்வியின் பெயர்.

2:3-4 வெள்ளை மேனியள்.

3-ஆம் அடிக்குப்பின் ஓர் ஏடு பின்வருமாறு மாறுபட்டுள்ளது.
நன்னூல் மடந்தை உலக மாதா
சாவித் திரியே காயத் திரியென
வாக்கின் செல்வியை நோக்கிய பெயரே.

6-7 சொற்பயில் முதல்வி காயத் திரியே
சொல்லபி ராமி சாவித் திரியே.

6:1-2 நலங்கே ழிசைமகள்

6:3-4 சொல்லபி ராமி சில ஏட்டில் இல்லை. இதற்குப் பதில், 'சுக்கில வடிவி' என்றொரு பாடம் காணப்படுகிறது. (19)

## 20. சேட்டை பெயர்

முகடி, தவ்வை, கலதி, மூதேவி,
காக்கைக் கொடியாள், கழுதை வாகனி,
கேட்டை, கெடலணங்கு, சேட்டை பெயரே.

**சேட்டை பெயர் (8)**

1. முகடி, 2. தவ்வை, 3. கலதி, 4. மூதேவி, 5. காக்கைக் கொடியாள், 6. கழுதைவாகனி, 7. கேட்டை, 8. கெடலணங்கு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சேட்டையின் பெயர், கேட்டை பெயர், மூதேவி பெயர்

1 : 2 தௌவை 2 : 1-2 காக்கைக் கொடியோள் 3 : 2-4 கெடிலணங்கு சேட்டைப் பெயரே 3 : 3-4 மூதேவி பெயரே.

இந்நூற்பா 18-ஆம் நூற்பாவாகிய திருமகள் பெயருக்கு முன்னதாகவும் சில ஏடுகளில் உள்ளது. (20)

## 21. இந்திராணி பெயர்

சுந்தரி, ச்சியே, அயிராணி, புலோமசை,
இந்திரன் தேவிக்கு எய்தும் பெயரே.

**இந்திராணி பெயர் (4)**

1. சுந்தரி, 2. சசி, 3. அயிராணி, 4. புலோமசை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: அயிராணி பெயர்
1:4 புலோமிசை (21)

## 22. பத்திரகாளி பெயர்

சூலி, எண் தோளி, தாருக விநாசனி
மாதரி. வீரி, கவுரி, முக் க்ண்ணி
பயிரவி, கவுமாரி, சாமுண்டி, சண்டிகை,
யோகினி, வேதாளி, யாமளை, மாகாளி.

**பத்திரகாளி பெயர் (14)**

1. சூலி, 2. எண்தோளி. 3. தாருகவிநாசனி, 4. மாதரி, 5. வீரி, 6. கவுரி, 7. முக்கண்ணி, 8. பயிரவி 9. கவுமாரி, 10. சாமுண்டி, 11. சண்டிகை, 12. யோகினி, 13. வேதாளி, 14. யாமளை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு; காளியின் பெயர்

2:1-2 மாதிரு வீரி, 3 கௌரி, 3:2 கௌமாரி, குமரி, குமாரி, 4:3 யாமளி (22)

## 23. பகவதி பெயர்

கொற்றவை, ஐயை, கார்த்திகை, கவுரி,
துர்க்கை, சூலி, மயிடற் காய்ந்தாள்,
நீலி, எண் தோளி, விந்தை, சயமகள்,
(இருங்) கலை யூர்தி, (எழில்) அரி யேறி,
(மேதித் தலைமிசை) விசயை, அந்தரி,
மாலுக்கு இளையாள், சிக்கரா யுதியே,
பாலைக் கிழத்தி. (பண்) அம் பணத்தி,
நாரா யணியே, கன்னி, குமரி,
சீர்சால் பகவதி சிறந்ததொல் பெயரே.



**பகவதி பெயர் (22)**

1. கொற்றவை, 2. ஐயை, 3. கார்த்திகை, 4. கவுரி, 5. துர்க்கை, 6. சூலி, 7. மயிடற்காய்ந்தாள், 8. நீலி, 9. எண் தோளி, 10. விந்தை, 11. சயமகள், 12. கலையூர்தி, 13. அரி யேறி, 14. விசயை, 15. அந்தரி 16. மாலுக்கிளையாள், 17. சக்கராயுதி, 18. பாலைக்கிழத்தி, 19. அம்பணத்தி, 20. நாராயணி, 21. கன்னி, 22. குமரி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : துர்க்கை பெயர்

1:3 ஆரியை 4 கெவுரி, கௌரி 2:3-4 மயிடற் காய்ந் தோள் 5:3 விசையை 6:1-2 மாலுக்கிளையோள், 3-4 சக்கரா யுதியாள் 7:3-4 பன்னம் பணத்தி 8:4 குமாரி. 1-6 அடிகள் துர்க்கை பெயர் என்றும், 7-9 அடிகள் பகவதி பெயர் என்றும் இரண்டாகக் கொண்டும் சில ஏடுகள் அமைந்துள்ளன. (23)

## 24. இடாகினி பெயர்

வஞ்சனி. மாயவள், வல்லவை, இடாகினி.

**இடாகினி பெயர் (3)**

1. வஞ்சனி, 2. மாயவள், 3. வல்லவை,

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 வல்லவை யிடாகினி (24)

## 25. யோகினி பெயர்

சண்மினி, சூர்மகள், யோகினி ஆகும்.

**யோகினி பெயர் (2)**

1. சண்மினி, 2. சூர்மகள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 சண்பனி, [illegible]னி (25)

## 26. அமரமாதர் பெயர்

அரம்பையர், அரமகளிர், அமரர் மாதர்.

**அமரமாதர் பெயர் (2)**

1. அரம்பையர், 2. அரமகளிர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: அரம்பையர் பெயர் (26)

### 27. தெய்வப்பெண் பொதுப் பெயர்

அணங்கும், சூரும், தெய்வப்பெண் பொதுப்பெயர்.

**தெய்வப்பெண் பொதுப்பெயர் (2)**

1. அணங்கு, 2. சூர்.

பாடவேறுபாடு—விளக்கம்

26-27ஆம் நூற்பாக்கள் இரண்டும் இணைந்து ஒரு நூற்பாவாய்த் 'தெய்வப் பெண் பொதுப்பெயர்' எனச் சில பிரதிகளில் காணப்படுகிறது. (27)

### 28. தேவர் பொதுப்பெயர்

வானவர், இமையவர், விண்ணவர், கடவுளர்,
அமரர், சுரர், புலவர், அண்டர், புத்தேளிர்,
ஐயர், உம்பர், தேவர் பொதுப்பெயர்

**தேவர் பொதுப்பெயர் (10)**

1. வானவர், 2. இமையவர், 3. விண்ணவர், 4. கடவுளர், 5. அமரர், 6. சுரர், 7. புலவர், 8. அண்டர், 9. புத்தேளிர், 10. உம்பர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: தேவர்கள் பொதுப்பெயர்.

3. அய்ய ரும்பர் விபதர் ஆதித்தர்
அமுதா சனரே தேவர் பொதுப் பெயரே (28)

### 29. கடவுளர் பொதுப்பெயர்

பண்ணவர், பகவர், தீர்த்தர், பட்டாரகர்,
புங்கவர், என்பவும் கடவுளர் பொதுப்பெயர்.

**கடவுளர் பொதுப்பெயர் (5)**

1. பண்ணவர், 2. பகவர், 3. தீர்த்தர், 4. பட்டாரகர், 5. புங்கவர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:3-4 தீர்த்தர்பட்டாகரர்.
2:2 எனவும்



கடவுளர்: அருகன், புத்தன் போன்ற தெய்வத்தன்மை பெற்றவர்.

28-29 இரண்டையும் 'தேவர் பொதுப்பெயர்' என ஒரு நூற்பாகவும் சில ஏடுகள் கொண்டுள்ளன. (29)

### 30. அசுரர் பெயர்

தானவர், அவுணர், தகுவர், தயித்தியர் என்று
இனைய நான்கும் நிசாசரரும் அசுரர்.

**அசுரர் பெயர் (5)**

1. தானவர், 2. அவுணர், 3. தகுவர், 4. தயித்தியர், 5. நிசாசரர்.

பாடவேறுபாடு—விளக்கம்

2. ஏனைய நான்கும் நிசாசரர் நிருதர். (30)

### 31. மாவலி பெயர்

வைரோ சனனே மாவலி அவுணன்.

**மாவலி பெயர்**

வைரோசனன்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: மாவெலி பெயர், மாவலியர் பெயர்.
வயிரோ சனரே மாவெலி யவுணர்.
வயிரோ சனனே. (31)

### 32. அரக்கர் பெயர்

அரக்கர் இராக்கதர் நிசாசரர் நிருதர் என்று
உரைத்த நான்கும் ஒன்றன் பால
சாலகடங் கடரும் பிசிதா சனரும்
யாது தானரும் அவ்வினத் தவரே.

**அரக்கர் பெயர் (7)**

1. அரக்கர், 2. இராக்கதர், 3. நிசாசரர், 4. நிருதர் 5. சாலகடங்கடர், 6. பிசிதாசனர், 7. யாதுதானர்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 4 நிசிசரரென், நிசிசரர்
3 : 3-4 பிசிதவூணரும்

3-4 சாலகடங் கடரும் நிருதர் தாமும்
யாதுதா னவரும் அவ்வினத் தவரே.

3-4 தனி நூற்பாவாக 'நிருதர் பெயர்' என்றும் தலைப்பிட்டும் சில பிரதி உள்ளது.

யாதுதானவர் என்பதை யாதுதானவர் என்றும் பிரிக்கலாம். (32)

## 33. வித்தியாதரர் பெயர்

விஞ்சையர், கேசரர், வித்தியா தரரே.

**வித்தியாதரர் பெயர் (2)**

1. விஞ்சையர், 2. கேசரர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: விஞ்சையர் பெயர்
விஞ்சையர் கோசரர். (33)

## 34. கந்திருவர் பெயர்

தந்திரர், கின்னரர், வீணை வல்லவர்,
கந்திருவர் பெயர் எனக் கருதல் வேண்டும்:

**கந்திருவர் பெயர் (3)**

1. தந்திரர், 2. கின்னரர், 3. வீணை வல்லவர். (34)

## 35. பூதகணத்தின் பெயர்

சாரதம், கிருத்திமம், குறள், கூளி, பாரிடம்
பூதகணம் எனப் புகன்றனர் புலவர்.

**பூதகணத்தின் பெயர் (5)**

1. சாரதம், 2. கிருத்திமம், 3. குறள், 4. கூளி, 5. பாரிடம்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: பூதகணப் பெயர்

1:1 சாதகம்; 2:3 புகல்வர். (35)

## 36. பேயின் பெயர்

கழுது, சோகு, கடி, கணம், மண்ணை,
அலகை, கூளி, பசாசு, வேதாளம்,



பிரேதம், சாவோடு. (இணங்கு) குணபாசி என்று
இனைய ஈராறும் பேய் எனல் வேண்டும்.

**பேயின் பெயர் (12)**

1, கழுது, 2. சோகு, 3. கடி, 4. கணம், 5. மண்ணை 6. அலகை, 7. கூளி, 8. பசாசு, 9. வேதாளம், 10. பிரேதம், 11. சாவு, 12. குணபாசி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 அன்னை 2:3 பிசாசு 3:1 பிரேதகம்; 3 இணங்கி, 1:4 சாபி ரேதம் குணபா சினியென் பிரேதகணம் சாவு குணங்கும் பசாசென் 4:3-4 பேயென வேண்டும், பேயெனலாகும். (36)

## 37. ஆகாயத்தின் பெயர்

அந்தரம், ஆசினி, அம்பரம், மங்குல்,
அண்டம், வானம், ககனம், மீ, வெளி,
விண்ணே, மாகம், விசும்போடு, உம்பர்,
இடம், குடில், என்றாங்கு இவை பதினைந்தும்
அடங்கல் இல் ஆகாயப் பெயர் ஆகும்மே.

**ஆகாயத்தின் பெயர் (15)**

1. அந்தரம், 2. ஆசினி, 3. அம்பரம், 4. மங்குல் 5. அண்டம், 6. வானம், 7. ககனம், 8. மீ, 9. வெளி, 10. விண், 11. மாகம், 12. விசும்பு, 13. உம்பர், 14. இடம், 15. குடில்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆகாசத்தின் பெயர்.

3 : 1-3 விண்ணாக மாகம் விசும்பதலை யும்பர் 4:3-4 இவைபதி னேழும் 5 : 1.2 அடங்கலும் ஆகா யப்பெய ராகும்; 2-4 ஆகாயப் பெயரென்ற றைவர். ஆகாசப் பெயரென வரைவர். பதினேழு என்பார் 3 ஆம் அடியின் பாடபேதத்தை ஆதாரமாக வைத்து, நாகம், தலை என இரு பெயர்களைக் கொள்வர். (37)

## 38. காற்றின் பெயர்

வாதம், கூதிர், வங்கூழ், கால், வளி,
ஊதை, அனிலம், கோதை, நீழல்,
உலவை, மாருதம், மீருத்து, பவனம்,
வாடை, ஒலியே,கதை, உயிர்ப்பே,
வேற்றலம், கொண்டல். கோடை, என்று இருபதும்
காற்றின் பெயர் எனக் கருதல் வேண்டும்.

**காற்றின் பெயர் (20)**

1. வாதம், 2. கூதிர், 3, வங்கூழ், 4. கால் 5, வளி 6. ஊதை, 7. அனிலம், 8. கோதை, 9. நீழல், 10. உலவை, 11. மாருதம், 12. மருத்து, 13. பவனம், 14. வாடை, 15. ஒலி, 16. கூதை, 17. உயிர்ப்பு, 18. வேற்றலம், 19. கொண்டல், 20. கோடை.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 4 கீழல் 5 : 1-2 வேற்றலுங் கொண்டலும், வேத்தலுங் கொண்டலும் (38)

## 39. பனிக்காற்றின் பெயர்

கூதையும், ஊதையும் குளிர்பனிக் காற்றே.

**பனிக்காற்றின் பெயர் (2)**

1. கூதை, 2. ஊதை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: குளிர்பனிக் காற்றின் பெயர்.

1:1 கூதிரும் (39)

## 40. வடகாற்றின் பெயர்

வாடை, வடந்தை, வடகாற்று ஆகும்.

**வடகாற்றின் பெயர் (2)**

1. வாடை, 2. வடந்தை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: வாடைக்காற்றின் பெயர். (40)

## 41. மேல்காற்றின் பெயர்

கோடை, மேல் காற்றே.

**மேல் காற்றின் பெயர் (1)**

1. கோடை.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 மேல் காற்று. (41)

## 42. கீழ்காற்றின் பெயர்

கொண்டல், கீழ் காற்றே.



**கீழ்காற்றின் பெயர் (1)**

1. கொண்டல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 கீழ் காற்று. 41, 42 ஆம் நூற்பாக்கள், 'கோடை மேல்காற்றுக் கொண்டல் கீழ் காற்றே' என ஒரே நூற்பாகவும் சில ஏடுகளில் தரப்பட்டுள்ளது. (42)

## 43. தென்றலின் பெயர்

மந்தா நிலமே, மலயக் காலே,
தென்கால், வசந்தன், தென்றல் என்று இசைப்பர்.

**தென்றலின் பெயர் (4)**

1. மந்தாநிலம், 2. மலயக்கால், 3. தென்கால், 4. வசந்தன்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: தென்காற்றின் பெயர்.

2:2 வயந்தன், 2:3-4 தென்றலிளங் காலே, இந்நூற்பாவுடன் மேலும் ஓரடி, 'காலவிளங் காலுஞ் சிறுகாலு மதன்பெயர்' என்று ஒரு சில பிரதிகளில் காணப்படுகிறது. (43)

## 44. சுழல்காற்றின் பெயர்

சூறை வளியே, சுழன்று எழு காற்றே.

**சுழலகாற்றின் பெயர் (1)**

1. சூறைவளி.

பாட வேறுபாடு—விளக்கம்

தலைப்பு: சுழன்றெழு காற்றின் பெயர், சூறாவளியின் பெயர்.

சூறைவளியின் பெயர்.

1:1-2 சூறாவளியே. இந்நூற்பாவுடன், 'சூறா வளியெனச் சொல்லவு" படுமே' என ஓர் அடி சேர்த்தும் சில பிரதிகள். 'சூறை சாரிகை சுழன்றெழு காற்றே'— என்பது அச்சுப் பிரதிப் பாடம்.* இந்நூற்பாவினை அடுத்து, தெச வாயுவின் பெயர், தெசவாயுவு செய் குணத்தின் பெயர் என்னும் இரு தலைப்புகளில் கேரளப் பல்கலைக் கழகச் சுவடிகள் சில வற்றில் இரு நூற்பாக்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு:

* அச்சுப் பிரதி என்பது தாண்டவராய முதலியார், நயநப்ப முதலியார் ஆகியோர் வெளியிட்ட முதற்பதிப்புகளையே குறிக்கும்.

### தெச வாயுவின் பெயர்

பிராண னபானன் வியானன் உதானன்
சமானன் நாகன் கர்மன் கிருதரன்
தேவ தத்தன் தனஞ்செய னென்ப
வாயுவு, வொருபத் தாகு மிவைதான்.

### தெச வாயுவு செய் குணத்தின் பெயர்

இதைய மண்டலத் தியங்கும் பிராணன்
புச்சத் தலத்திடை நிற்ப தபானன்
நாபியி னின்றங் கோவா துதானன்
வியான னெங்கும் வியாபியாய் நிற்கும்
கந்தர் குளியிடைச் சந்துடைச் சமானன்
முடக்கலும் நீட்டலும் கிளர்ப்பது நாகன்.
உரோமம் புளகித் திமைத்தலும் கூர்மன்
கிருதர னென்பது முகத்திடைக் கெழுதே
தும்மலுஞ் சினமும் வெம்மையும் விளக்கும்
ஓட்டமும் வெயர்ப்புந் தேவதத்தன் றொழிலே
ஒல்கா வனப்பி னல்லவர் கேண்மையின்
உயிருடல் விடினும் தானுடல் விடாது
அதொக்க நின்றங் குடலினை வீக்கித்
தலைகிழித் தகல்வது தனஞ்செயன் றொழிலே. (44)

## 45. நெருப்பின் பெயர்

அழல், அங்காரகன், அங்கி, கனலி.
எரி, தழல், தபனன், பாவகன், தீ, அனல்,
(செஞ்)சுடர்ப் பகவன், ஞெகிழி, உதாசனன்,
உதவகன், தனஞ்செயன், வசு, எழு நா, அரி,
தென்கீழ்த் திசையோன், வன்னி, தேயு என்று
இன்னவை பிறவும் நெருப்பின் பெயரே.

### நெருப்பின் பெயர் (21)

1. அழல், 2. அங்காரகன், 3. அங்கி, 4. கனலி, 5. எரி, 6. தழல், 7. தபனன், 8. பாவகன், 9. தீ, 10. அனல், 11. சுடர்ப்பகவன், 12. ஞெகிழி, 13. உதாசனன், 14. உதவகன், 15, தனஞ்செயன், 16. வசு, 17. எழுநா, 18. அரி, 19. தென் கீழ்த் திசையோன், 20. வன்னி, 21. தேயு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு: தீயின் பெயர், அக்கினியின் பெயர்,

2:2-3 தபனன் தகனன் 3:1.2 செஞ்சுடர்ப் பாவகன் 4:1 உதகவன் 4ஆம் அடிக்குப்பின், ‘தேயு—சுகியே சித்திரபானு முளரியென்றின்னவை...’ என ஓர் அடி அதிகமாய் ஒரு பிரதியில் உள்ளது. (45)



## 46. வடவாமுகாக்கினியின் பெயர்

உத்தர, மடங்கல், ஊழித் தீ, என
(வைத்த) கடையனல், வடவா முகமே.

### வடவாமுகாக்கினியின் பெயர் (3)

1. உத்தரமடங்கல், 2. ஊழித்தீ. 3. கடையனல். (46)

## 47. விளக்கின் பெயர்

தீபமும், சுடரும், விளக்கு எனச் செப்புவர்.

### விளக்கின் பெயர் (2)

1. தீபம், 2. சுடர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : திருவிளக்கின் பெயர்.

1 : 3 - 4 விளக்கின் பெயரே

1 : 1 - 4 தீபமுஞ்சுடரும் ஒளியும் விளக்கே.

இந் நூற்பாவை அடுத்து ‘அதிபதித்தீப் பெயர்’ என்னும் தலைப்பில் புதுச் சூத்திரம் ஒன்று ஓர் ஏட்டில் காணப்பட்டது.

### அதிபதித் தீப்பெயர்

சாத வேதா மைவா கனனே
வீதி கோத்திரம் கருநெறி யாரல்
அதிபதித் தீப்பே ராகு மென்ப. (47)

## 48. அனற்பொறியின் பெயர்

புலிங்கம், அனற்பொறி.

### அனற்பொறியின் பெயர் (1)

1. புலிங்கம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தீப்பொறியின் பெயர்.

புலிங்கம் பொறியனல். (48)

## 49. அனற்றிரளின் பெயர்

உற்கம், அனல்-திரள்

**அனற்றிரளின் பெயர் (1)**

1. உற்கம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தீத்திரளின் பெயர்

1 : 2 அனற்றிரளே

48 - 49 ஆம் நூற்பாக்களை அனற்பொறிக்கும் அனற்றிரளுக்கும் பெயர் என, 'புலிங்க மனற்பொறி யுற்க மனற்றிரள்' என்று சில ஏடுகள் ஒரே நூற்பாவாகக் கொண்டுள்ளன. (49)

## 50. காட்டெரியின் பெயர்

தாவம், காட்டு எரி ஆகும் என்ப.

**காட்டெரியின் பெயர் (1)**

1. தாவம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தாபங் காட்டெரி என்பது அச்சுப்பிரதி.

1 : 1 தாபம்

1 : 3 - 4 யாகச் சாற்றுவர் (50)

## 51. கொள்ளியின் பெயர்

(இருள் கழி) உற்கை, ஞெகிழி, (கடைக்) கொள்ளி.

**கொள்ளியின் பெயர் (2)**

1. உற்கை, 2. ஞெகிழி.

பாடவேறுபாடு—விளக்கம்

'ஞெகிழி கடைக்கொள்ளி' என்றும் சில ஏடுகள்.
இந்நூற்பா சில பிரதிகளில் இல்லை. (51)

## 52. தீக்கடை கோலின் பெயர்

அரணி, ஞெலிகோல், தீக்கடை கோலே.

**தீக்கடை கோலின் பெயர் (2)**

1. அரணி, 2. ஞெலிகோல். (52)



## 53. தீக்கடவுள் பெயர்

பாவகன், அத்தீக் கடவுள் பெயரே.

**தீக்கடவுள் பெயர் (1)**

1. பாவகன்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அக்கினி தேவன் பெயர், அக்கினி பகவான் பெயர். (53)

## 54. நீரின் பெயர்

அறலும், புனலும், அப்பும், பாணியும்,
உதகமும், கமலமும், அமுதமும், கவந்தமும்,
பயமும், சலிலமும், அயமும், அளகமும்,
புவனமும், வனமும், கோவும், கீலாலமும்,
காண்டமும், தோயமும், நாரமும், நீரே.

**நீரின் பெயர் (19)**

1. அறல், 2. புனல், 3. அப்பு, 4. பாணி, 5. உதகம், 6. கமலம், 7. அமுதம், 8. கவந்தம், 9. பயம், 10. சலிலம், 11. அயம், 12. அளகம், 13. புவனம், 14. வனம், 15. கோ, 16. கீலாலம், 17. காண்டம், 18. தோயம், 19. நாரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தண்ணீரின் பெயர்

1 : 4 பானியும், 3 : 2 சலிலம், 4 : 1 புனமும், 4. கிலாலம்.

இந்நூற்பாவை அடுத்து, 'வெடியின் பெயர்' என்னும் தலைப்பில் ஒரு நூற்பா ஒருசில பிரதிகளில் உள்ளது.

**வெடியின் பெயர்**

நறும்புகை குய்யே வெடியென நவில்வர். (54)

## 55. வெள்ள நீரின் பெயர்

நீத்தம், பிரளயம், வாரி, வெள்ள நீர்.

**வெள்ள நீரின் பெயர் (3)**

1. நீத்தம், 2. பிரளயம், 3. வாரி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வெள்ளத்தின் பெயர்
1 : 2 பிரளையம். (55)

## 56. வருணன் பெயர்

மற்றுஅப் புனற்கரசன் வருணன் ஆகும்.

**வருணன் பெயர் (1)**

1. புனற்கரசன்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : புனற்கரசன் பெயர், இதற்கு ஏற்பப் புனற்கரசன் பெயர் வருணன் என்று எடுத்துக் காட்டுவர். (56)

## 57. அருக்கன் பெயர்

வெய்யோன், இருள்வலி, பதங்கன், சூரியன்,
சுடரவன், தரணி, உதையன், ஆதித்தன்,
எல்லை, மார்த் தாண்டன், தினகரன், பனிப்பகை,
பரிதி, செங்கதிர், அலரி, பானு,
வெஞ்சுடர், கிரணன், பகலவன், வேந்தன்,
ஆயிரங் கதிரோன், அழலவன், திவாகரன்,
இரவி, பாற்கரன், என்றூழ், அருணன்,
கனலி, ஞாயிறு, விரிச்சிகன், கதிரவன்,
சான்றோன், அரியே, தபனன், ஆதவன் என
ஆன்ற அருக்கற்கு அனந்தம் பெயரே. 19

**அருக்கன் பெயர் (35)**

1. வெய்யோன், 2. இருள்வலி, 3. பதங்கன், 4. சூரியன், 5. சுடரவன், 6. தரணி, 7. உதையன், 8. ஆதித்தன், 9. எல்லை, 10. மார்த்தாண்டன், 11. தினகரன், 12. பனிப்பகை, 13. பரிதி, 14. செங்கதிர், 15. அலரி, 16. பானு, 17. வெஞ்சுடர், 18. கிரணன், 19. பகலவன், 20. வேந்தன், 21. ஆயிரங்கதிரோன், 22. அழலவன், 23. திவாகரன், 24. இரவி, 25. பாற்கரன், 26. என்றூழ், 27. அருணன், 28. கனலி, 29. ஞாயிறு, 30. விரிச்சிகன், 31. கதிரவன், 32. சான்றோன், 33. அரி, 34. தபனன், 35. ஆதவன்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சூரியன் பெயர்



2 : 4 ஆதவன், 3 : 1-2 எல்லு மாத்தாண்டன்,
5 : 3-4 பகலவன் கதிரவன், 8 : 1-4 ஆதித்தன் கனலி ஞாயிறு விரிச்சிகன், 3-4 விச்சிகன் கதிரவன்,
9 : 3-4 தபனென் றினையவும்.

இந் நூற்பாவை அடுத்து 'வெங்கதிர் மண்டலத்தின் பெயர்' என்னும் தலைப்பில் 'விசையமென்பது வெங்கதிர் மண்டலம்' என ஒரு நூற்பா கேரளப் பல்கலைக் கழகச் சுவடியில் காணப்படுகிறது. (57)

## 58. சந்திரன் பெயர்

அம்புலி, திங்கள், குபேரன், அருச்சிகன்,
நிசாகரன், இமகரன், ஆலோன், களங்கன்,
தண்சுடர்க் கலையோன், இராக்கதிர், தானவன்,
(வீபத்து) உடுபதி, அமுத கிரணன்,
இந்து, சோமன், பிறை, மதி, சசி, விது,
வந்தன பிறவும் நிலவும் சந்திரன்.

**சந்திரன் பெயர் (20)**

1. அம்புலி, 2. திங்கள், 3. குபேரன், 4. அருச்சிகன், 5. நிசாகரன், 6. இமகரன், 7. ஆலோன், 8. களங்கன், 9. தண்சுடர்க் கலையோன், 10. இராக்கதிர், 11. தானவன், 12. உடுபதி, 13. அமுதகிரணன், 14. இந்து, 15. சோமன், 16. பிறை, 17. மதி, 18. சசி, 19. விது, 20. நிலவு.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 அரிச்சிகன் 2:1 நிசாசரன்
4:1-2 வியோமத் துடுபதி, வீமத் துடுபதி, விம்பத் துடுமதி.
3-4 அமிர்த கிரணன் 5-6:4, 1-2 விதுவென வந்த பிறவும்
6:1-2 வந்தவை பிறவும் (58)

## 59. செவ்வாயின் பெயர்

அங்காரகன், குசன், ஆரல், வக்கிரன்,
மங்கலன், அறிவன், செந்தீ வண்ணன்,
பூமகன், நிலமகன், சேயே, செவ்வாய்
நாமம் என்று நவின்றனர் புலவர்.

**செவ்வாயின் பெயர் (10)**

1. அங்காரகன், 2. குசன், 3. ஆரல், 4. வக்கிரன், 5. மங்கலன், 6. அறிவன், 7. செந்தீ வண்ணன், 8. பூமகன், 9. நிலமகன், 10. சேய்.

பாடவேறுபாடு—விளக்கம்

3:1-4 பூமக னிலமகன் குருதிசேய், செவ்வாய்
3-4 செய்யோன் செவ்வாய், சேயென செவ்வாய்

2ஆம் அடிக்குப் பின்,
தங்கிய அறிவன் தழலே யுலோகிதன்

3:1 பூமன் 3:3-4 நவிற்றினர் புலவர். (59)

## 60. புதன் பெயர்

அருணன், தூதுவன், அனுவழி, மேதை,
மதிமகன், பாகன், மாலவன், கணக்கன்.
புந்திகன், புலவன், பண்டிதன், சவுமன்.
சிந்தை கரியோன், அறிவன், புதன் என
வந்த நாமம் மற்று அவற்கு ஆகும்.

**புதன் பெயர் (14)**

1. அருணன், 2. தூதுவன், 3. அனுவழி, 4. மேதை, 5. மதிமகன், 6. பாகன், 7. மாலவன், 8. கணக்கன், 9. புந்திகன், 10. புலவன், 11. பண்டிதன், 12. சவுமன், 13. சிந்தை கரியோன், 14. அறிவன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2 பாகவன், 3. மால்மகன்.
3:1 புந்திதன், புந்தி, 4. சவுமியன், சௌமியன்
4:1-2 சிந்தை கரியன்
4-5 சிந்தை கரியன் களவன் பச்சை
வந்த பிறவும் புதனென வைப்பர். (60)

## 61. வியாழத்தின் பெயர்

மந்திரி, ஆசான், பீதகன், சுரகுரு,
அந்தணன், அரசன், ஆண்டளப்பான், பிரகற்பதி,
(சுந்தரப்) பொன், குரு, மறையோன், வியாழம்.

**வியாழத்தின் பெயர் (11)**

1. மந்திரி, 2. ஆசான், 3. பீதகன், 4. சுரகுரு, 5. அந்தணன், 6. அரசன், 7. ஆண்டளப்பான், 8. பிரகற்பதி, 9. பொன், 10. குரு, 11. மறையோன்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 4 சுரர்குரு 2 : 4 பிருகற்பதி (61)



## 62. சுக்கிரன் பெயர்

பளிங்கு, பார்க்கவன், புகர், புயல், மழைக்கோன்,
(விளங்கு) திங்கள், பிரசுரன். சல்லியன்,
ஒள்ளியோன், சுங்கன், அசுரர்மந்திரி, (என)
வெள்ளி, சிதன், கவி, பிருகு, சுக்கிரன் பெயர்.

**சுக்கிரன் பெயர் (15)**

1. பளிங்கு, 2. பார்க்கவன், 3. புகர், 4. புயல், 5. மழைக்கோன், 6. திங்கள், 7. பிரசுரன், 8. சல்லியன், 9. ஒள்ளியோன், 10. சுங்கன், 11. அசுரர் மந்திரி, 12. வெள்ளி, 13. சிதன், 14. கவி, 15. பிருகு.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2 பாற்கவன்
3 : 2 சுங்கவன், 3-4 அசுரமந்திரியென
4 வெள்ளி சிதன் பிருகு சுக்கிரன் பெயரே, (62)

## 63. சனியின் பெயர்

மந்தன், காரி, கரியோன், முடவன்,
அந்தன், நீலன், கதிர்மகன், கீழ்மகன்,
பங்கு, மேற்கோன், சவுரி, முதுமகன்,
(சந்தில்)சாவகன், சனியின் பெயரே.

**சனியின் பெயர் (13)**

1. மந்தன், 2. காரி, 3. கரியோன், 4. முடவன், 5. அந்தன், 6. நீலன், 7. கதிர்மகன், 8. கீழ்மகன், 9. பங்கு, 10. மேற்கோன், 11. சவுரி, 12. முதுமகன், 13. சாவகன்.

பாடவேறுபாடு—விளக்கம்

2 : 1 அந்தணன் (63)

## 64. வாரத்தின் பொதுப்பெயர்

வாசரம், கிழமை, வாரம் ஆகும்.

**வாரத்தின் பொதுப்பெயர் (2)**

1. வாசரம், 2. கிழமை.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பா சிறுபான்மை ஏடுகளில் இல்லை. (64)

## 65. இராகுவின் பெயர்

இராகுக்கோள், கரும்பாம்பு.

**இராகுவின் பெயர் (1)**

1. கரும்பாம்பு. (65)

## 66. கேதுவின் பெயர்

கேதுக்கோள், செம்பாம்பு.

**கேதுவின் பெயர் (1)**

1. செம்பாம்பு.

பாடவேறுபாடு—விளக்கம்

2 செம்பாம்பே.

65, 66ஆம் நூற்பாக்களை, 'இராகுக்கோள் கரும்பாம்பு கேதுக்கோள் செம்பாம்பு' என ஒரே நூற்பாவாகக்கொண்டு, இராகுவுக்கும் கேதுவுக்கும் பெயர்' என்னும் தலைப்பில் சில ஏடுகள் கொண்டுள்ளன. (66)

## 67. அனந்தன் பெயர்

அனந்தன் பெயரே சேடன் ஆகும்.

**அனந்தன் பெயர் (1)**

1. சேடன்.

பாடவேறுபாடு—விளக்கம்

3-4 சேடனு மாகும். (67)

## 68. மேட ராசியின் பெயர்

வருடை, உதள், தகர், மறி, மை, கொறி, என
விரியும் ஆட்டின் பெயர் மேட இராசி

**மேட ராசியின் பெயர் (6)**

1. வருடை, 2. உதள், 3. தகர், 4. மறி, 5. மை, 6. கொறி, மற்றும் ஆட்டின் பெயர் அனைத்தும் ஆம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 விரியு மாட்டுப் பெயர், விரவிய ஆட்டுப் பெயர். (68)



## 69. இடப ராசியின் பெயர்

பாறல், புல்லம், பாண்டில், பசு, மூரி,
ஏறு முதல் வந்தன இடபஇராசி

**இடப ராசியின் பெயர் (6)**

1. பாறல், 2. புல்லம், 3. பாண்டில், 4. பசு, 5. மூரி, 6. ஏறு. இவை முதலாகிய பசுப்பெயர் பலவும் ஆம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 பாறவை (69)

## 70. மிதுன ராசிப் பெயர்

பாடவை, ஆடவள், இரட்டை, சவைமகள்,
(மேவும்) யாழ்ப் பல்பெயர், தண்டே மிதுனம்.

**மிதுன ராசிப் பெயர் (6)**

1. பாடவை, 2. ஆடவள், 3. இரட்டை. 4. சவைமகள், 5. யாழ், 6, தண்டு மற்றும் யாழின் பெயர் எல்லாம் ஆம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மிதுனத்தின் பெயர்.
1:2 ஆடவை 4. சயமகள். (70)

## 71. கர்க்கடக ராசிப் பெயர்

அலவன், நள்ளி, குளிரம், ஞெண்டு, (ஆர்)மதி,
களவன் என்று இவை கர்க்கடகப் பெயரே.

**கர்க்கடக ராசிப் பெயர் (6)**

1. அலவன், 2. நள்ளி, 3. குளிரம். 4. ஞெண்டு, 5. மதி, 6. களவன்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கடக ராசிப் பெயர். கர்க்கடகத்தின் பெயர்.
1:3 குளிர் ஞெண்டு 3-4 ஞெண்டாமதி, ஞெண்டரைமதி.
2:1 கள்வன், 3. கற்கடகப் (71)

## 72. சிங்க ராசியின் பெயர்

அரிமா, புலி, ஐ யானனம், யாளி,
தெரியின், புலி, சீயப் பல்பெயர் சிங்கம்,

**சிங்க ராசியின் பெயர் (4)**

1. அரிமா, 2. புலி, 3. ஐயானனம், 4. யாளி, மற்றும் புலி சீயங்களின் பல பெயர்களும். அரிமா என்பதனை அரி, மா என இரு பெயராகக் கொள்வர் சிலர்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு ; சிங்கத்தின் பெயர்
1:2-3 புலியே யையானனம், புலியே யானனம்,
2:1-4 தெரியிற் சிங்கப் பல்பெயர் பெறுமே. (72)

## 73. கன்னி ராசிப் பெயர்

பெண்மைப் பெயரே கன்னிக்கும் பெறுமே.

**கன்னிராசிப் பெயர் :**

பெண் பெயர் யாவும் ஆகும்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கன்னியின் பெயர்.
2 : 3 கன்னிக்குப் பெயரே, கன்னிக்கு மாகும். (73)

## 74. துலாராசிப் பெயர்

நிறையே, கட்டளை, வாணிகன், நிறுப்பான்
துலையே, கோலெனத் துலாப்பெயர் பெறுமே.

**துலாராசிப் பெயர் (6)**

1. நிறை, 2. கட்டளை, 3. வாணிகன், 4. நிறுப்பான், 5. துலை, 6. கோல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : துலாத்தின் பெயர்.
1:3-4 நிறுப்பான் வாணிகன், 3, வாணிபன், 4. நிறுப்போன்.
2:2 கோலே. (74)

## 75. விருச்சிகராசிப் பெயர்

தெறுக்கால், பறப்பன், தேளே, விருச்சிகம்,
நலமென் பெயருந் தேளின் மேற்றே.

**விருச்சிகராசிப் பெயர் (4)**

1. தெறுக்கால், 2. பறப்பான், 3. தேள், 4. நலம்,



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : விருச்சிகத்தின் பெயர்
1:4 விருச்சிகன் (75)

## 76. தனுராசிப் பெயர்

சாபம், காண்டீபம், தனுவின் பெயரே.

**தனுராசிப் பெயர் (2)**

1. சாபம், 2. காண்டீபம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : தனுவின் பெயர்
1-2 காண்டிபம், காண்டீவம். (76)

## 77. மகரராசிப் பெயர்

மானே, கலை, சுறா, மகரப்பெயரே.

**மகரராசிப் பெயர் (3)**

1. மான், 2. கலை, 3. சுறா.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மகரத்தின் பெயர் (77)

## 78. கும்பராசிப் பெயர்

குடமே, சாடிப் பெயரே, கும்பம்.

**கும்பராசிப் பெயர் (2)**

1. குடம், 2. சாடி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கும்பத்தின் பெயர்
1 : 3 பெயரென் (78)

## 79. மீனராசியின் பெயர்

மீனம், மீனின் பல்பெயர் பெறுமே.

**மீனராசியின் பெயர் :**

மீன் பெயர் எல்லாம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மீனத்தின் பெயர்

இதன்பின் இருநூற்பாக்கள் ஓர் ஏட்டில் மிகையாகக் காணப் பட்டன.

அவை வருமாறு :

மேட மிடபம் மிதுனம் கடகம்
சீயம் கன்னி துலாமும் தேளும்
வில்லும் மகரமும் கும்பமும் மீனமும்
என்னும் பெயருடை ஈரா றுள்ளும்
ஒப்புடை மிதுன மொழித்தல் லாதன
அப்பெயர் கப்பெயர் அனைத்து மாகும்
இல்லும் ஓரையும் ராசி யென்ப
பவன மென்பது மதன்பாற் படுமே, (79)

## 80· அச்சுவதியின் பெயர்

இரலை, ஐப்பசி, யாழ், ஏறு, தலைநாள்,
புரவி, மருத்துவநாள் அச்சு வதி என்ப.

**அச்சுவதியின் பெயர் (7)**

1. இரலை, 2. ஐப்பசி, 3. யாழ், 4. ஏறு, 5. தலை நாள், 6. புரவி, 7. மருத்துவநாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அசுபதியின் பெயர்.

1:1-3 இரலையைப் பசியா னேறு
2:1-2 புரவிமருத்துவனாள்.
2:3 அச்சுவினி, அசுபதி
2:1-4 புரவி யசுபதி யென்மனார் புலவர். (80)

## 81. பரணிநாளின் பெயர்

காடு கிழவோள் பூதம் அடுப்பே
தாழி, தாசி, சோறு, தருமன்நாள், போதம்என
பாகு பட்டது பரணிநாள் பெயரே.

**பரணிநாளின் பெயர் (8)**

1. காடுகிழவோள், 2. பூதம், 3. அடுப்பு, 4. தாழி, 5. தாசி, 6. சோறு, 7. தருமன்நாள், 8. போதம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பரணியின் பெயர்



1:1-2 காடு கிழவோன்
2:1-2 தாழி பெருஞ்சோறு, தாழி தராசு
4 பொதுவெனப் (81)

## 82. கார்த்திகையின் பெயர்

அங்கி, ஆரல், அளக்கர், அளகு, இறால்
(பொங்கிய) நாடன், நாவிதன், வாணன்,
(தங்கு ஒளி) அறுமீன், தழலே, கார்த்திகை.

**கார்த்திகையின் பெயர் (10)**

1. அங்கி, 2. ஆரல், 3. அளக்கர், 4. அளகு, 5. இறால், 6. நாடன். 7. நாவிதன், 8. வாணன், 9. அறுமீன், 10, தழல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 அளக்கிறால் 2:4 பாணன், வானவன்
3:3 தழனாள் (82)

## 83. உரோகணியின் பெயர்

பண்டி, பார், சகடு, சாகாடு, வையம்,
(ஒண்திறல்) உருள், தேர், அயன்நாள், உரோகணி.

**உரோகணியின் பெயர் (8)**

1. பண்டி, 2. பார். 3, சகடு, 4. சாகாடு, 5, வையம், 6. உருள், 7. தேர், 8. அயன்நாள்.

பாட வேறுபாடு—விளக்கம்

2:3-4 ருரோகிணிப் பெயரே. 4. உரோகிணி.
2 ஒண்டிற லுருளே இபுத்திரி கோணம்
உளற்றா லயனா ளுரோகிணி யாகும். (83)

## 84. மகசிரத்தின் பெயர்

மாழ்கு, பேராளன், மான்தலை, இந்திரன்,
மார்கழி, நரிப்புறம், மதிநாள், மும்மீன்,
பாலை, வெய்யோன், மகசிரப் பல்பெயர்.

**மகசிரத்தின் பெயர் (10)**

1. மாழ்கு, 2. பேராளன், 3. மான்தலை, 4. இந்திரன், 5. மார்கழி, 6. நரிப்புறம், 7. மதிநாள், 8. மும்மீன், 9. பாலை, 10. வெய்யோன்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மிருகசீரிடத்தின் பெயர், மிருக சீரிடப் பெயர்,
3:3-4 மிருகசீரிடப் பல்பெயர், மிருகசீரிடப் பெயர்
2ம் 3ம் அடிகளாக.

பாலை வெய்யோன் மதிநாள் மும்மீன்
சீருள மிருக சீரிடப் பெயரே. (84)

### 85. திருவாதிரையின் பெயர்

மூதிரை, செங்கை, யாழ், ஈசர் தினமென
ஆதிரை தன்பெயர் ஆகும் என்ப.

**திருவாதிரையின் பெயர் (4)**

1. மூதிரை, 2. செங்கை, 3. யாழ், 4. ஈசர்தினம்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 மூதுரை
3:1-2 ஆதிரையின் பெயர். (85)

### 86. புனர்பூசத்தின் பெயர்

அதிதிநாள், மூங்கில், கரும்பு, ஆவணம், பாலை,
புனிதம், பிண்டி, புனர்தம், புனர்பூசம்.

**புனர்பூசத்தின் பெயர் (8)**

1. அதிதிநாள், 2. மூங்கில், 3. கரும்பு, 4. ஆவணம், 5. பாலை, 6. புனிதம், 7. பிண்டி, 8. புனர்தம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : புனர்பூசப் பெயர்
2:3-4 புணர்தம் புணர்பூசம் (86)

### 87. பூசத்தின் பெயர்

கொடிறு, காற்குளம், சுரர்குரு நாள், வண்டு,
புணர்வது ஆகும் பூசநாள் பெயரே.

**பூசத்தின் பெயர் (4)**

1. கொடிறு, 2. காற்குளம், 3. சுரர்குருநாள், 4. வண்டு.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 1 கொடிறுகை, கொடுறுகை. (87)



### 88. ஆயிலியத்தின் பெயர்

அரவின்நாள், கௌவை, ஆயிலியப் பெயரே.

**ஆயிலியத்தின் பெயர் (2)**

1. அரவின் நாள், 2. கௌவை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆயிலியப் பெயர்.
அரவனாட் கவ்வை ஆயிலியப் பெயரே.
3 : 4 ஆயில் லியமே. (88)

### 89. மகத்தின் பெயர்

வேட்டுவன், கொடுநுகம், எழுவா யெழுஞ்சனி
வாய்க்கால், பிதிர்நாள், மாசி, மகம் ஆகும்.

**மகத்தின் பெயர் (6)**

1. வேட்டுவன், 2. கொடுநுகம், 3. எழுவாயெழுஞ்சனி, 4. வாய்க்கால், 5. பிதிர்நாள், 6. மாசி.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2 கொழுநுகம் 3-4 எழுவாய தெழுஞ்சனி.
2 : 2 பிதிரர்நாள் (89)

### 90. பூரத்தின் பெயர்

இடைய தெழுஞ்சனி, எலியே, துர்க்கை,
பகவதிநாள், நாவிதன், கணையே, பூரம்.

**பூரத்தின் பெயர் (6)**

1. இடையதெழுஞ்சனி, 2. எலி, 3. துர்க்கை, 4. பகவதிநாள், 5. நாவிதன், 6. கணை.

1 : 1-2 இடையே யெழுஞ்சனி, 4. துர்க்கை.
2 : 1 பகவனாள். 3-4 கணைபல் பூரம் (90)

### 91. உத்திரத்தின் பெயர்

பங்குனி, கடைய தெழுஞ்சனி, பாற்குனி,
மானேறு, மாரிநாள் உத்திரம் ஆகும்.

**உத்திரத்தின் பெயர் (5)**

1. பங்குனி, 2, கடையதெழுஞ்சனி, 3. பார்குனி, 4. மானேறு, 5. மாரிநாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உத்தரத்தின் பெயர்.

1 : 4 பாற்குனம்
2 : 1 - 2 ஒன்று மாரிநாள். 2. கதிர்நாள், 3-4 உத்திர
மென்ப, உத்தர மாகும். (91)

## 92. அத்தத்தின் பெயர்

கைம்மீன், காமரம், களிறு, கவுத்துவம்,
நவ்வி, கயினி, ஐவிரல், அத்தம்.

**அத்தத்தின் பெயர் (7)**

1. கைம்மீன், 2. காமரம், 3. களிறு, 4. கவுத்துவம், 5. நவ்வி, 6. கயினி, 7. ஐவிரல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 2 கரமான், 4. கௌத்துவம்
2 : 2 கன்னி, கனலினாள் (92)

## 93. சித்திரையின் பெயர்

நெய்வான், மீன், சுவை, பயற்றொடு, நேர்வாள்,
(செவ்விதின்) துவட்டாநாள். சித்திரை என்ப.

**சித்திரையின் பெயர் (6)**

1. நெய்வான், 2. மீன், 3. சுவை, 4. பயறு, 5. நேர்வான், 6. துவட்டாநாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1 : 1 நெய்பால்
2 : 4 ஆகும் (93)

## 94. சோதிநாளின் பெயர்

விளக்கே, வீழ்க்கை, வெறுநுகம், மரக்கால்,
(துளக்கம் இல்) அனிலநாள், சோதி நாள் ஆகும்.



**சோதிநாளின் பெயர் (5)**

1. விளக்கு, 2. வீழ்க்கை, 3. வெறுநுகம், 4. மரக்கால், 5. அனிலநாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சுவாதிநாளின் பெயர், சோதியின் பெயர்.
2 : 1 துலக்கமில், 3-4 சோதி யாகும். (94)

## 95. விசாகத்தின் பெயர்

முறமே, முற்றில், வைகாசி, அனிலநாள்
பெறுமே சுளகு விசாகநாள் பெயரே.

**விசாகத்தின் பெயர் (5)**

1. முறம், 2. முற்றில், 3. வைகாசி, 4. அனிலநாள், 5. சுளகு.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : விசாகநாளின் பெயர்
4 : 3 வைசாகம், வையாசி. (95)

## 96. அனுடத்தின் பெயர்

பனை, தேள், பெண்ணை, புல்,தாளி, போந்தை,
மித்திர நாள், இவை அனுடப் பெயரே.

**அனுடத்தின் பெயர் (7)**

1. பனை, 2. தேள், 3. பெண்ணை, 4. புல், 5. தாளி, 6. போந்தை, 7. மித்திரநாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அனுடத்தின் பெயர், அனுஷத்தின் பெயர்.
1:4 போந்தையென்
2:1-4 நினையமித் திரநா ளிவையனுடப் பெயரே.
நினையவை யெல்லா மனுடப் பெயரே. (96)

## 97. கேட்டையின் பெயர்

துளங்கொளி, வல்லாரை, வேதி, எரி, தழல்,
(கிளந்த) இந்திர நாள், பின்று, ஆம் கேட்டை.

**கேட்டையின் பெயர் (7)**

1. துளங்கொளி, 2. வல்லாரை, 3. வேதி, 4. எரி, 5. தழல், 6. இந்திரநாள், 7. பின்று,

பாடவேறுபாடு—விளக்கம்

1:2-4 வலாரி வேரி யெரியழல்
2:2-4 இந்திர நாளது கேட்டை;
3-4 பின்றாக் கேட்டை, பின்னாங் கேட்டை. (97)

## 98. மூலத்தின் பெயர்

கொக்கே, தேட்கடை, குருகு, வில், அன்றில்,
(முற்றும்) ஆனி, அசுரநாள், மூலம்.

**மூலத்தின் பெயர் (7)**

1, கொக்கு, 2. தேட்கடை, 3. குருகு, 4. வில், 5. அன்றில், 6. ஆனி, 7. அசுரநாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:2-3 ஆனியம் அசுரர் நாள் (98)

## 99. பூராடத்தின் பெயர்

உடைகுளம், முற்குளம், நீர்நாள், பூராடம்.

**பூராடத்தின் பெயர் (3)**

1. உடைகுளம், 2. முற்குளம், 3. நீர்நாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:2 முக்குளம்,
உடைகுளம் முற்குளம் மாரி நீர்நாட்
புகலு மற்றிவை பூராடப் பெயரே. (99)

## 100. உத்திராடத்தின் பெயர்

ஆனி, ஆடி, கடைக்குளம், விச்சுவநாள்,
நாடில்உத் திராட நாள்ஆ கும்மே.

**உத்திராடத்தின் பெயர் (4)**

1. ஆனி, 2. ஆடி, 3. கடைக்குளம், 4. விச்சுவநாள்.



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உத்திராட நாளின் பெயர்.
1:1-2 ஆடி ஆனி, 4. விச்சுவநாள், விசுவநாள்
2 நாடிலுத்தி ராடத்துக்கு நவின்றனர் புலவர். (100)

## 101. திருவோணத்தின் பெயர்

(நலத்தகு) வயிரம், நள்ளே, சிரவணம்,
உலக்கை, சோணை, மாயோன்நாள், ஓணம்.

**திருவோணத்தின் பெயர் (6)**

1. வயிரம், 2. நள், 3. சிரவணம், 4. உலக்கை, 5. சோணை, 6. மாயோன்நாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 நலத்தகை
2:2 சோனை, சோணம். (101)

## 102. அவிட்டத்தின் பெயர்

ஆவணி, காக்கை, பறவை, புள், வசுநாள்,
மேவிய அவிட்ட மீனின் பெயரே.

**அவிட்டத்தின் பெயர் (5)**

1. ஆவணி, 2. காக்கை, 3. பறவை, 4. புள், 5. வசுநாள். (102)

## 103. சதையத்தின் பெயர்

குன்று, போரே, சுண்டன், (பெருஞ்) செக்கு,
(தங்கு) வருணன்நாள் சதைய நாள் ஆகும்.

**சதையத்தின் பெயர் (5)**

1. குன்று, 2. போர், 3. சுண்டன், 4. செக்கு, 5. வருணன் நாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சதயநாளின் பெயர்.
2:1 தங்கும், 3-4 சதைய மாகும். (103)

## 104. பூரட்டாதியின் பெயர்

புரட்டாதி, முற்கொழுங் கோல், பூரட்டாதி,
உரைப்பர், நாழியும் அந்நா ளுடனே.

**பூரட்டாதியின் பெயர் (3)**

1. புரட்டாதி, 2. முற்கொழுங்கோல், 3. நாழி.

பாடவேறுபாடு—விளக்கம்

1:4 பூரட்டாதிக்கு
2 என்ன வுரைப்பர் நாழியு மிசையும், உரைப்பர்
நாழியு மிசையுமந் நாளுடனே, உரைப்பர் நாழியு
மசைவி னாளுடனே. (104)

## 105. உத்திரட்டாதியின் பெயர்

முரசு, பிற் கொழுங்கோல், மன்னன், இம் மூன்றினோடு
உரைசெய் அறிவன் நாள், உத்திரட்டாதி.

**உத்திரட்டாதியின் பெயர் (4)**

1. முரசு, 2. பிற்கொழுங்கோல், 3. மன்னன்,
4. அறிவன் நாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உத்திரட்டாதியின் பெயர்
2:1-2 டுரை செய்க வறிவனாள். (105)

## 106. இரேவதியின் பெயர்

தொழுவே, நாவாய், தோணி, சூலம்,
பஃறி, பூடாநாள், கடைமீன், இரேவதி,

**இரேவதியின் பெயர் (7)**

1. தொழு, 2. நாவாய், 3. தோணி, 4. சூலம்,
5. பஃறி, 6. பூடாநாள், 7. கடைமீன்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ரேவதியின் பெயர்.
2:1 பகுதி, 2. புருடநாள், புருநாள், ரேபதி. (106)

## 107. அருந்ததியின் பெயர்

அருந்ததி, சாலி, வடமீன் ஆகும்.



**அருந்ததியின் பெயர் (2)**

1. சாலி, 2. வடமீன்.
1. அருந்துதி, 2. சாலினி.

பாடவேறுபாடு—விளக்கம்

சாலி வடமீ னருந்ததி யாகும். (107)

## 108. வானமீனின் பெயர்

உடு, தா ராகணம், ஒளி, வான் மீனே.

**வானமீனின் பெயர் (3)**

1. உடு, 2. தாராகணம். 3. ஒளி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நட்சத்திரப் பொதுப்பெயர்
1-3 உடுதா ரகை கண மொழிவான் (108)

## 109. காலநுட்பத்தின் பெயர்

துடியும், கலையும், தொடர் கால நுட்பம்.

**காலநுட்பத்தின் பெயர் (2)**

1. துடி, 2. கலை, (109)

## 110. நாழிகையின் பெயர்

கன்னலும், இருத்தையும், கடிகையும், பதமும்,
(சொன்ன) விகலையும். நாழிகைத் தொல்பெயர்.

**நாழிகையின் பெயர் (5)**

1. கன்னல், 2. இருத்தை, 3. கடிகை, 4. பதம்,
5. விகலை.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 சொன்னவில் கலையும், 4. தொல்பெயரே. (110)

## 111. பொழுதின் பெயர்

வேலையும், அமையமும், காலையும், பதமும்,
ஏல்வையும், காலமும், பொழுது எனப் படுமே.

**பொழுதின் பெயர் (6)**

1. வேலை, 2. அமையம், 3. காலை, 4. பதம், 5. ஏல்வை, 6. காலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

நண்பக லுச்சி நாளொடு காலை
யந்தி யென்றிவை சந்தியாகும். (111)

## 112. சந்தியின் பெயர்

நண்பகல், உச்சி, நாளொடு, காலை,
அந்தி என்று இவை சந்தி ஆகும்.

**சந்தியின் பெயர் (5)**

1. நண்பகல், 2. உச்சி, 3. நாள், 4. காலை, 5. அந்தி.

பாடவேறுபாடு—விளக்கம்

இந்நூற்பாவின் முன்னடியை 'முற்சந்தியின் பெயர்' என்றும், பின்னடியை, 'பிற்சந்தியின் பெயர்', என்றும் பெயரிட்டுச் சில பிரதி அமைந்துள்ளது.

தலைப்பு : முச்சந்தியின் பெயர்
1:3 நடுப்பகல் மத்தியானம்
2 அந்தி என்பது சந்தியாகும்.
அச்சுப் பிரதி பின்வருமாறு உள்ளது:
உச்சியின் பெயர் : நண்பகலுச்சி.
சந்தியின் பெயர் : அந்தி சந்தி (112)

## 113. சாமத்தின் பெயர்

யாமம், சாமம்.

**சாமத்தின் பெயர் (1)**

1. யாமம். (113)

## 114. பகலின் பெயர்

எல்லே, பகல் ஆம்

**பகலின் பெயர் (1)**

1. எல்



பாடவேறுபாடு—விளக்கம்

113, 114 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகக் கொண்டு, 'சாமத்துக்கும் பகலுக்கும் பெயர்' எனத் தலைப்பிட்டு அமைப்பர் சிலர் (114)

## 115. வெயிலின் பெயர்

என்றூழ், ஆதவம், வெயில் எனப் படுமே.

**வெயிலின் பெயர் (2)**

1. என்றூழ், 2. ஆதவம்.

பாடவேறுபாடு—விளக்கம்

கோடை என்றூழ் எல்லொளி வெயிலெனல்
ஆதபம் என்பவும் அப்பெயர்க் குரித்தே.
எனவும் சில பிரதி கூறும்.

இந்நூற்பாவின் பின், சந்திரிகையின் பெயர்;

நிலவுச் சந்திரிகை என்று அச்சுப்பிரதியில் காணப்படுகிறது. வேறு சில ஏட்டில் வெயிலின் பெயரையடுத்துப் பின்வரும் இரு நூற்பாக்கள் உள :

**சூரிய கிரணத்தின் பெயர்**

கரமே திவிர மரிசி கிர ணங்கதிர்

**சந்திர கிரணத்தின் பெயர்**

விசைய மென்பது வெண்கதிர் மண்டிலம். (115)

## 116. இரவின் பெயர்

எல்லியும், கங்குலும், யாமமும், மாலையும்,
அல்லும், மங்குலும், இரசனியும், அல்கலும்,
யாமினியும், நிசியும், எல்லும், இரவே.

**இரவின் பெயர் (11)**

1. எல்லி, 1. கங்குல், 3. யாமம், 4. மாலை, 5. அல், 6. மங்குல், 7. இரசனி, 8. அல்கல், 9. யாமினி, 10. நிசி, 11. எல்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 அல்லும் பகலும்
2 அல்லும் அசனியும் மங்குலும் அல்கலும்
3:3 விவாற்பரியும், விபாபரியும். (116)

### 117. இருளின் பெயர்

நிசியே, நத்தம், நீலம் அதனோடு
திமிரமும், தமமும், இருள் ஆ குமமே.

**இருளின் பெயர் (5)**

1. நிசி, 2. நத்தம், 3. நீலம், 4. திமிரம், 5. தமம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 தமமே யிருளா கும்மே.
இருளின் பெயரின்பின்னர் ஓர் ஏட்டில் பின்வரும் இரு நூற்பாக்கள் காணப்பட்டன :

நிலவின் பெயர் சந் திரிகை யென்ப.

கலை பிறை நிரம்பல் கருதுங் காலே. (117)

### 118. நாளின் பெயர்

பகலும், வைகலும், திவசமும், தினமும்
ஆனியமும், திவாவும், நாள்ஆ கும்மே.

**நாளின் பெயர் (6)**

1. பகல், 2. வைகல், 3. திவசம், 4, தினம், 5. ஆனியம், 6. திவா

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 நாளா தாகும். (118)

### 119. முன்னை நாளின் பெயர்

நென்னலும், நெருநலும், முன்னைநாள் ஆகும்.

**முன்னை நாளின் பெயர் (2)**

1. நென்னல், நெருநல். (119)

### 120. பின்னைநாளின் பெயர்

பிற்றையும். பின்றையும் பின்னை எனல் ஆகும்.

**பின்னை நாளின் பெயர் (2)**

1, பிற்றை, 2. பின்றை.



பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பின்னையின் பெயர், பின்னையென்னும் பெயர்.
3-4 பின்னைநா ளாகும்.

119-120 ஆம் நூற்பாக்கள் அச்சுப்பிரதியில் 111 ஆம் நூற்பாவாகிய பொழுதின் பெயரை அடுத்து உள்ளன. (120)

### 121. அருணோதயத்தின் பெயர்

வைகறை, விடியல், புலரி, அரு ணோதயம்.

**அருணோதயத்தின் பெயர் (3)**

1. வைகறை, 2. விடியல், 3. புலரி.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பிரமாவின் அருணோதயத்தின் பெயர்.
'வைகறையிற் பாதம் பிரமனரு ணோதயம்.' (121)

### 122. பக்கத்தின் பெயர்

திதியே, பக்கம்.

**பக்கத்தின் பெயர் (1)**

1. திதி (122)

### 123. திங்களின் பெயர்

மதியே திங்கள்.

**திங்களின் பெயர் (1)**

1. மதி

பாடவேறுபாடு—விளக்கம்

மதியே திங்கள் மாத மாகும் - அச்சுப்பிரதி.
122-123 ஆம் நூற்பாக்களை, 'திதியே பக்கம் மதியே திங்கள்' என ஒரே நூற்பாவாகக் கொண்டு 'திதிக்கும் திங்களுக்கும் பெயர்' என்னும் தலைப்பின்கீழ் அமைத்தலும் காணப்படுகிறது. (123)

## 124. முதற்பக்கத்துக்குப் பெயர்

பக்கம் முதலது, நந்தை ஆகும்.

**முதற்பக்கத்துக்குப் பெயர் (1)**

1. நந்தை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பிரதலமயின் பெயர். (124)

## 125. இரண்டாம் பக்கத்துக்குப் பெயர்

பத்திரை என்பது இரண்டாம் பக்கம்.

**இரண்டாம் பக்கத்துக்குப் பெயர் (1)**

1. பத்திரை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : துதிகையின் பெயர். (125)

## 126. மூன்றாம் பக்கத்துக்குப் பெயர்

மூன்றே சயைபக்கம்.

**மூன்றாம் பக்கத்துக்குப் பெயர் (1)**

1. சயை

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : திரிகையின் பெயர்
கயபக்கர், செயபக்கம். (126)

## 127. நான்காம் பக்கத்துக்குப் பெயர்

நான்கே, இருத்தை.

**நான்காம் பக்கத்துக்குப் பெயர் (1)**

1. இருத்தை.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : சதுர்த்திகையின் பெயர், சதுர்த்தியின் பெயர்.
126-127ஆம் நூற்பாக்களை 'மூன்றாம் பக்கத்துக்கும் நான்காம் பக்கத்துக்கும் பெயர்' எனத் தலைப்பிட்டு ஒரே நூற்பாகவும் கொள்வர். (127)



## 128 ஐந்தாம் பக்கத்துக்குப் பெயர்

ஐந்தாம் பக்கம், பூரணை ஆகும்.

**ஐந்தாம் பக்கத்துக்குப் பெயர் (1)**

1. பூரணை

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பஞ்சமியின் பெயர்.
அஞ்சாம் பக்கம் பூர்ண மாகும். (128)

## 129. பாதிநாளின் பெயர்

அரைநாளும், பானாளும், அத்தநாளும், பாதி

**பாதிநாளின் பெயர் (3)**

1. அரைநாள், 2. பானாள், அத்தநாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இருணாளின் பெயர்
அரைநாளும் பானாளும் இருணா ளாகும்
அரைநாளும் பானாளு மத்த நாளும்
பாதி நாளே பரகிணியு மாகும்.
3-4 அத்த நாளும் பாதிநாள்—அச்சுப்பிரதி (129)

## 130. காலத்தின் பெயர்

ஊழி, காலம்

**காலத்தின் பெயர் (1)**

1. ஊழி

பாட வேறுபாடு—விளக்கம்

சில பிரதிகளில் இந்நூற்பா இல்லை.
முதற் பதிப்பிலும் இஃது இல்லை. (130)

## 131. மாத்திரையின் பெயர்

கணமே, மாத்திரை

**மாத்திரையின் பெயர் (1)**

1. கணம்

பாடவேறுபாடு—விளக்கம்

ஊழிக்கும் மாத்திரைக்கும் பெயர் என்னும் தலைப்பில்
130, 131 ஆம் நூற்பாக்களை ஒரே நூற்பாவாகக்
கொள்வர் சிலர். (131)

## 132. நிகழ்காலத்தின் பெயர்

வேலை என்பது நிகழ்காலம் ஆகும்

**நிகழ்காலத்தின் பெயர் (1)**

1. வேலை

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : நிகழ்காலப் பெயர்
3-4 நிகழுங் காலம் (132)

## 133. வெப்பத்தின் பெயர்

உருப்பம், வெப்பம்

**வெப்பத்தின் பெயர் (1)**

1. உருப்பம்

பாடவேறுபாடு—விளக்கம்

உருப்பம் வெப்பம் ஆகும் என்ப. (133)

## 134. கோடையின் பெயர்

வேனில், கோடை.

**கோடையின் பெயர் (1)**

1. வேனில்

பாடவேறுபாடு—விளக்கம்

வேனில் கோடை மிசைப்பெயர் ஆகும்.
'உருப்பம் வெப்பம் வேனில் கோடை' என
ஒரே நூற்பாவாகவும் சில பிரதிகளில் காணப்படும். (134)

## 135. சிறுபொழுதின் பெயர்

ஒல்லை, சிறுவரை, சிறுபொழுது ஆகும்.



**சிறுபொழுதின் பெயர் (2)**

1. ஒல்லை, 2. சிறுவரை. (135)

## 136. அறுவகைப் பருவப் பெயர்

காரே, கூதிர், முன்பனி, பின்பனி,
(சீர்) இள வேனில், வேனில், என்றாங்கு
இருமூ வகைய பருவம் என்ப.
அவைதாம்,
ஆவணி முதலா இரண்டிரண் டாக
மேவின திங்கள் எண்ணினர் கொளவே.

**அறுவகைப் பருவப் பெயர் (6)**

1. கார், 2. கூதிர், 3. முன்பனி, 4. பின்பனி,
5. இளவேனில், 6. வேனில். இவற்றுள் ஒவ்வொரு பருவமும் ஆவணி முதலாகமுறையே இரண்டு இரண்டு மாத அளவினதாகும்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : அறுவகைப் பருவத்தின் பெயர்.
2:3 முதுவேனில்
3:1-2 இரு மூன்று வகைய,
இருமூன்று வகைப் பருவமவை தாம்
5:3-4 ஓரிரண்டாக. (136)

## 137. பனியின் பெயர்

இமமும், துகினமும், மஞ்சும், நீகாரமும்,
பனியின் பெயர்எனப் பகரப் படுமே.

**பனியின் பெயர் (4)**

1. இமம், 2. துகினம், 3. மஞ்சு, 4. நீகாரம்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:3-4 பகர வேண்டும். (137)

## 138. சரற்காலத்தின் பெயர்

கார் எனும் காலப் பெயர் சரற்காலம்.

**சரற்காலத்தின் பெயர் (1)**

1. கார்

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கார்காலத்தின் பெயர். (138)

## 139. அச்சிரநாவின் பெயர்

கூதிர்க் காலமும், (குளிர்) பனிக் காலமும்
ஆகும் என்ப அச்சிர நாளே.

**அச்சிரநாவின் பெயர் (2)**

1. கூதிர்க்காலம், 2. பனிக்காலம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : கூதிர்க்காலத்துக்கும்
பனிக்காலத்துக்கும் பெயர்.

2:3-4 சிசர நாளே; முதற்பதிப்புப் பாடம் (139)

## 140. இருதுப் பருவத்தின் பெயர்

ஆனியம். இருதுப் பருவம் ஆகும்.

**இருதுப் பருவத்தின் பெயர் (1)**

1. ஆனியம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பருவத்தின் பெயர்.
1-2 ஆனியமும் இருதுவும்; முதற்பதிப்புப்பாடம் (140)

## 141. காலத்தின் பெயர்

பருவமும், யாண்டும், காலம் ஆகும்.

**காலத்தின் பெயர் (2)**

1. பருவம், 2. யாண்டு.
2-4 ஆண்டும் காலமும் ஆகும்,
யாண்டு மூழியுங் காலம். (141)

## 142. உகமுடிவின் பெயர்

ஊழியும். உறையுளும், உகம்முடிவு ஆகும்.

**உகமுடிவின் பெயர் (2)**

1. ஊழி. 2. உறையுள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உகத்தின் பெயர், காலத்தின் பெயர்.
3-4 உகமா கும்மே, கால மாகும். (142)



## 143. கற்பத்தின் பெயர்

நான்முகன் வாழ்நாள். கற்பம் ஆகும்.

**கற்பத்தின் பெயர் (1)**

1. நான்முகன் வாழ்நாள்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பிரமகற்பத்தின் பெயர்,
நான்முகன் வாழ்நாளின் பெயர். (143)

## 144. வாழ்நாளின் பெயர்

ஆயுள், ஆயுகம், வாழ்நாள் ஆகும்.

**வாழ்நாளின் பெயர் (2)**

1. ஆயுள். 2. ஆயுகம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வயதின் பெயர்.
இதன்பின் அச்சுப்பிரதியில் இருநூற்பாக்கள் உள.

**மேலின் பெயர்**

மேக்கு வலமீ யும்பர்மே லாகும்.

**கீழின் பெயர்**

கிழக்கு கீழே.

இவை பெரும்பான்மைப் பிரதிகளிலும் இல்லை. பேராசிரியர் மு. இராகவையங்கார் தம்முடைய பிரதியில் இவற்றைச் சேர்த்துள்ளார். எனினும், அவர், 'இச்சூத்திரங்கள் இங்கு வருதலினும் இடப்பெயர்த் தொகுதியில் இருத்தற்குரியன' என்று குறிப்புத் தந்துள்ளார். இதனால் இவை இங்கு அமைதல் பொருத்தமாகாது என்பதுவே பேராசிரியர் கருத்தும் ஆகும்.

(144)

## 145. மழையின் பெயர்

துவலை, பெயலை, துளியே, மாரி,
உறை, பெயல், ஆலி, உதகம், சிதறி,
தூவல், சீகரம், தூறல், வருடம்.

**மழையின் பெயர் (13)**

1. துவலை, 2. பெயலை, 3. துளி, 4. மாரி, 5. உறை, 6. பெயல், 7. ஆலி, 8. உதகம், 9. சிதறி, 10. தூவல், 11. சீகரம், 12. தூறல், 13. வருடம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : வருடத்தின் பெயர்
1:1-2 திவலை பெய்தல், (145)

## 146. மேகத்தின் பெயர்

மேகம், சீதம், விசும்பு, வான், விண், முகில்,
கொண்மூ, மஞ்சு, கொண்டல், மை, மழை,
எழிலி, கார், குயின், கந்தரம். விண்டு,
மங்குல், மால், செல், கனமும் வரையார்.

**மேகத்தின் பெயர் (19)**

1. சீதம், 2. விசும்பு, 3. வான், 4. விண், 5. முகில், 6. கொண்மூ, 7. மஞ்சு, 8. கொண்டல், 9. மை, 10. மழை, 11. எழிலி, 12. கார், 13. குயின், 14. கந்தரம், 15. விண்டு, 16. மங்குல். 17. மால், 18. செல், 19. கணம்.

பாடவேறுபாடு—விளக்கம்

4:4 வரையாரென்ப (146)

## 147. இடியேற்றின் பெயர்

உருமும், செல்லும், அசனியும், உருமேறும்,
இடியும், வானேறும், இடியேற்றின் பெயர்

**இடியேற்றின் பெயர் (6)**

1. உரும், 2. செல், 3. அசனி, 4. உருமேறு, 5. இடி, 6. வானேறு.

பாடவேறுபாடு—விளக்கம்

இதனைத் தொடர்ந்து ஒரு சில ஏடுகளில் நான்கு
நூற்பாக்கள் உள:
இடிவெடி ஒலியுருமும் விண்ணேறு அசனி
செல்லிடி யேறு மடங்கலு மதுவே.
இடிப்பெய ரிகுளையென் றிசைக்கவும் படுமே.
சம்பை வித்து சபலை தடித்து
சஞ்சலை துடித்தி, மின்னெனச் சாற்றுவர்.
மாரி வானம் வருடமழை யென்ப. (147)



## 148. பெருமழையின் பெயர்

ஆசாரம் என்பது பெருமழை ஆகும்.

**பெருமழையின் பெயர் (1)**

1. ஆசாரம் (148)

## 149. விடாது சொரிதலின் பெயர்

சோனையும், பனித்தலும், விடாது சொரிதல்.

**விடாது சொரிதலின் பெயர் (2)**

1. சோனை, 2. பனித்தல்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : விடாமழையின் பெயர் (149)

## 150. மழை பெய்து விடுதலின் பெயர்

தலையல் என்பது மழைபெய்து விடுதல்.

**மழைபெய்து விடுதலின் பெயர் (1)**

1. தலையல் (150)

## 151. துளியின் பெயர்

உறை, துளி ஆகும்.

**துளியின் பெயர் (1)**

1. உறை

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : உறைதுளியின் பெயர்.
துளியின் பெயர் சுட்டும் நூற்பா சில பிரதிகளில் இல்லை.
தளிபெய லாளி யுறைதுளி யாகும்—என்பது அச்சுப்பிரதி.
(151)

## 152. ஆலாங்கட்டிப் பெயர்

ஆலி, ஆலாங் கட்டி ஆகும்.

**ஆலாங்கட்டிப் பெயர் (1)**

1. ஆலி,

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : ஆலங்கட்டியின் பெயர்.
2-3 ஆலங்கட்டி
ஆனி சனோபலம் ஆலாங் கட்டி. (152)

## 153. துவலையின் பெயர்

சிதரம், பிசிரே, சிதர், அரி, சீகரம்,
தூவல், என்றுஇவை துவலை யாகும்.

**துவலையின் பெயர் (6)**

1. சிதரம், 2. பிசிர், 3. சிதர், 4. அரி, 5. சீகரம், 6. தூவல்.

பாடவேறுபாடு—விளக்கம்

1:1 சிகரம், சீகரம், 2. பிதிரே, 4. சிகரம்
2:1 தூறல் (153)

## 154. மின்னலின் பெயர்

தடித்தும், தடிந்தும், மின்னல் ஆகும்.

**மின்னலின் பெயர் (2)**

1. தடித்து, 2. தடிந்து.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : மின்னின் பெயர்:
தடித்துத் தடிமின்—என்பது அச்சுப் பிரதி (154)

## 155. இடியின் பெயர்

இடிப் பெயர், இருளே.

**இடியின் பெயர் (1)**

1. இருள்.

பாடவேறுபாடு—விளக்கம்

இடிப்பெய ருருமு மின்னல் வேண்டும்.
154-155 ஆம் நூற்பாக்களை 'தடித்துந் தடிந்துமின் இடிப் பெய ரிருளே' என ஒன்றாகக் கொண்டு மின்னலுக்கும் இடிக்கும் பெயர் எனவும் தலைப்பிடுவர். (155)



## 156. பரிவேடத்தின் பெயர்

ஊர்கோள், வட்டம், பரிவேடப் பெயரே.

**பரிவேடத்தின் பெயர் (2)**

1. ஊர்கோள், 2. வட்டம்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : பரிவேட பெயர்.
3-4 பரிவேட மென்ப. பரிதிபரி வேடம். (156)

## 157. வானவில்லின் பெயர்

வானவில், இந்திர வில்என மொழிப.

**வானவில்லின் பெயர் (1)**

1. இந்திரவில்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : இந்திரவில்லின் பெயர்.
4 வைப்பர், விசைப்பர், வறைவர். (157)

## 158. காமன் காண்டத்தின் பெயர்

காமன் காண்டம், கருப்புவில் ஆகும்.

**காமன் காண்டத்தின் பெயர் (1)**

1. கருப்புவில்.

பாடவேறுபாடு—விளக்கம்

தலைப்பு : காமன் காண்டவத்தின் பெயர்
1-2 காண்டவம், காண்டிபம்,
4 என்ப. (158)

## 159. திவாகர வரலாறு

வடநூற்கு அரசன். தென்தமிழ்க் கவிஞன்,
கவியரங்கு ஏறும் உபயகவிப் புலவன்,
செறிகுணத்து அம்பர் கிழவோன், சேந்தன்
அறிவுகரி யாகத் தெரிசொல் திவாகரத்து
முதலாவது தெய்வப் பெயர்த் தொகுதி முற்றும்.

பாடவேறுபாடு—விளக்கம்

2:1-2 ஏற்றும், 4:1-2 அறிவுக் கறிவாகத் (159)

## இரண்டாவது
# மக்கட்பெயர்த் தொகுதி